

# தூய ஆவியில் பயணம்

2011 வைகாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியில் பயணம்

**வைகாசி மாதம் 2011**

**"உமது விருப்பத்தைத் தவிர எனக்கு**

**வேறு எதுவும் இல்லை"**

ISSN 1391 - 5975

வெளியிடுபவர்
சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார்
கிது தன புபுதுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபத்திற்கு கைகொடுத்தல்

## 2011 வைகாசி

வைகாசி மாதம் பேறுபெற்ற தாய்க்கு அர்ப்பணமாக்கப்பட்ட மாதம் என்பதை இந்த யுகத்தில் கூறுவது மிகவும் கடினமானதாகும். அந்த கடினம் எனக்கே அத்தாய்க்கு முதலிடம் கொடுக்கும் பல்லாயிரம் கணக்கான மக்கள் இருக்கிறார்கள் எனக்கு எதிரிலிருக்கும் சுவரில் தொங்கும் தாயின் படம் எனக்கு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என் பாதை நான் ஏற்றுக் கொள்ளவே வேண்டும். அவர்களிடம் சென்று அவர்களின் தாக்கத்திற்கு இடமளிக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை அவர்களிடமிருந்து வரும் வல்லமைக்கு நான் அடிபணிய வேண்டும்.

பேறுபெற்ற தாயே, நீங்கள் நிரம்பியிருக்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் என்னையும் நிரப்புமாறு என் இதயத்தின் ஆழத்திலிருந்து வேண்டுகின்றேன்.

அருட்திரு ஒஸ்கா அபேயரத்ன அடிகளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 01 ஞாயிறு
பாஸ்கா காலம் 02 வது வாரம்
இறை இரக்கத்தின் ஞாயிறு

திபணி 2:42-47 தி.பாடல் 118:2-4 16-18 22-24
1பேதுரு 1:3-9 பு.யோ 20:19-31

இயேசு கிறிஸ்து ஆண்டவருக்கு முழுமையாக எமது வாழ்வினை அர்ப்பணிப்பதற்கான அழைப்புப்பெற்றுள்ள மக்கள் என்ற வகையில் நாம் எத்துணை பேறு பெற்றவர்கள் ஆவோம். அவரது உயிர்த்தெழுதலானது நாம் பெற்றுள்ள புதிய வாழ்வினை முகம் பார்க்கும் கண்ணாடியாகும்

திருச்சபைத் தாயானவள் மகா உன்னதரான இறைவனின் இரக்கத்தினை நினைவு கூறுமுகமாக இன்றைய நாளில் இறை இரக்கத்தின் விழாவினைக் கொண்டாடுகின்றார். ஆரம்ப சபையானது அனுபவித்த ஆண்டவருடைய அன்பினையும், இரக்கத்தையும் முன் கொண்டும் அந்த அனுபவத்தினை சங்கமமாக்கிக் கொள்வதன் வழியாக ஏற்பட்ட புதிய வாழ்கை முறையினை முன் கொண்டும். எல்லாம் வல்லவரைப் புகழுவோம். எம்மை தூதுரைப் பணியில் நிலைநிறுத்துகின்றார். சவால்களுக்கு மத்தியிலேனும் அச்சமின்றி அபிமானத்துடன் அவரது வல்லமையை, அவரது மகிமையை, அவரது மாட்சிமையை, அவரது அரசினை வெளிப்பாடாக்குவோம்.

## முதலாம்வெளிப்பாட்டிலிருந்து

**அவர்கள் திருதூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும் , அப்பம் பிடுவதிலும், அறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது.திருத்தூதர் வழியாகப் பல அருஞ்செயல்களும், அடையாளங்களும் நிகழ்ந்தன. நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்..... ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள். பேருவகை யோடும், எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவை பகிர்ந்து உண்டு வந்தார்கள்...... ஆண்டவர் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டேயிருந்தார்கள்.**

## ஒளியில் விழிப்புறுதல்

ஆரம்ப கிறிஸ்தவ சங்கத்தினர் வாழ்ந்த "சங்கம வாழ்வு" வழியாக உயிர்த்த ஆண்டவரை ஒரே ஆண்டவராக்கிக் கொண்டு வாழுதல் என்றால் என்ன? தெளிவாக புனைகின்றது. ஆரம்ப சங்கத்தினர் இயேசுவின் வாழ்வையே வாழ்ந்னர் வாழவும் செய்தனர். ஆனபடியால் சங்கம் எங்கிருந்ததோ, அங்கு உயிர்த்த ஆண்டவர் வல்மையோடு வெளிப்பாடாகினார். சங்கம் வழியாக ஆண்டவரது வல்மை எங்குதம் வெளிப்பாடாகியது. சில இடங்களில் திருத்தூதர்களின் நிழல் படும்படியாக நோயாளிகளை வீதியோரங்களில் கொண்டு வந்து வைத்தனர். சங்கம் வழியாக ஆண்டவரது வல்மையும், மீட்பும் ஆரம்ப சங்கத்தினுள் வெளிப்பாடாகியது. அவர்களது வாழ்கை சாட்சியானது இறையரசுக்காக வேண்டி மற்றவர்களுக்கு கதவுகள் திறப்பதற்கான தாக்கத்தையேற்படுத்தியது.

## பரி.நற்செய்தியிலிருந்து

**.....இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லிய பின் அவர் தன் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரை கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்....... "தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார் இதைச் சொன்ன பின் அவர் அவர்கள் மேல் ஊதி, "தூய ஆவியை பெற்று கொள்ளுங்கள் எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா...." என்றார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் பேரில்

இறையரசுக்காக வேண்டி தமது முழு வாழ்கையையுமே அர்ப்பனமாக்கிய ஆண்டவர், அபிமானம் மிகுந்த இறை மகனாக உயிர்ப்பின் மகிமையை பரிசாகப் பெற்றுக் கொண்டார், யூதர்களுக்கு பயந்தவர்களாக ஒளிந்து மறைந்திருந்த தமது சீடருக்கு மத்தில் தோன்றிய ஆண்டவர் தந்தையின் அமைதியையே அவர்களுக்கு உரித்தா க்குகின்றார். அவர் அளிக்கின்ற "அமைதி" யானது அச்சத்தை துரத்தியடிக்கின்ற, அனைவரையும் விடுதலையடையச் செய்கின்ற அமைதியாகும் தாழ்ந்தோரை உயர்வடையச் செய்கின்ற அமைதி யாகும்.

உயிர்த்த ஆண்டவர் தமது மரணத்தின் அடையாளங்களை தமது சீடர்களுக்கு காண்பிக்கின்றார்.கிறிஸ்து நாதருடைய துன்புறுதலில் பங்கேற்காதுஅவர் எமக்கு தருகின்ற மீட்பு, விடுதலை, அமைதி என்பனவற்றை எம்மால் அனுபவிக்க முடியுமா? என்பதை நாமே ஆவியானவருள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மகனைப் போல் அரசுக்காக வேண்டி நாமும்துன்புற வேண்டும், அர்ப்பணமாக வேண்டும், தேய்வடைய வேண்டும், உலகெங்கும் செல்ல வேண்டும் என்பதே அப்பா பிதா வானவரின் அபிப்பிராயமாகும். அதற்காக வேண்டியே நாம் ஆவியானவரினால் திருப் பொழிவு செய்யப் பட்டுள்ளோம் அதன் பேரில் நாம் விழிப்புள்ளவர்களாக இருக்கின்றோமா? ஆயத்தமாக உள் ளோமா? வல்லமையை வேண்டுவோம்.

## இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

.....அவர் தம் பேரிரக்கத்தின் படி, இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த் தெழச் செய்து நமக்கும் புதுப் பிறப்பு அளித்துள்ளார். இவ்வாறு குன்றா எதிர் நோக்குடன் நாம் வாழ்கின்றோம். அழியாத,மாசற்ற,அழியாத உரிமைப் பேறும் உங்களுக்கென விண்ணுலகில் வைக்கப்பட்டுள்ளது....... நீங்கள் அவரை பார்த்ததில்லை எனினும், அவர் மீது அன்பு செலுத்துகிறீர்கள்.... இவ்வாறு உங்கள் நம்பிக்கையின் குறிக்கோளான ஆன்ம மீட்பையும் பெறுகிறீர்கள்.

## இறைமகன் இயேசு பேரில்

இயேசு ஆண்டவரின் உயிர்தெழுதலின் வழியாக, மகா உன்னதர் எத்துனை பேரிரக்கம் உடையவர் என்பது தெளிவாகிறது. அகிலத்தையுமே அரவணைத்துக் கொள்ளும் முகமாக தமது ஒரே பேரான மகனையே பலியாகத் தந்தார். அது சங்கம் அனுபவிக்கின்ற வெற்றியும் மீட்புமாகும் அன்பு எங்குள்ளதோ அங்கே மரணம், அர்ப்பணம், தியாகம், பொறுமை என்பன உண்டு அவற்றில் இறுதி பெறுபேறு சொல்லிலடங்காத அக்களிப்பாகும். எம் ஆண்டவரது மரணத்தின் வழியாக எமக்கு உரிமை யாக்கப்பட்டுள்ள புதையலுக்காக வேண்டி இறைவனை பாடிப்புகழுவோம். சங்கத்திற்கு முகங்கொடுக்க நேரிடுகின்ற பீடனைகள் என்பன இயேசுவின் பாடுகளது அனுபவத்திற்கு உள்ளாவதற்கான வாசலாகும். கிறிஸ்து ஆண்டவருக்காக வேண்டியும் இறையரசுக்காக வேண்டியும் பீடனை களுக்கு முகங்கொடுப்பதற்கான தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.

## செபம்

*அப்பா தந்தையே, உம் திருமகனைப் போல அரசுக்காக வேண்டி அர்ப்பணமாவதற்கும், சங்கத்திலுள் வீற்றிருக்கின்ற உம் திருமகனைக் காண்பதற்கும் ஆவியானவர் வழியாக வழி காட்டியருளும். உமது பேரிரக்கத்தை நினைவு கூறுகின்ற இன்றைய நாளில் ஆவியானவரது மூச்சினால் எமக்கு புத்துயிர் அளித்தருளும். அரசுக்காக வேண்டி உமது திருவுள த்திற்கமைய பணி புரிவதற்காக வேண்டி என்னையும், எனது சங்கத்தையும் விழிப்புறச் செய்தருளும்.*

'கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டிடத்துக்கு
மூலைக்கல் ஆயிற்று: ஆண்டவரால் இது
நிகழ்ந்துள்ளது. ஆண்டவர் தோற்றுவித்த
வெற்றியின் நாள் இதுவே.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 02 திங்கள் பாஸ்கா காலம் 02 வது வாரம்

தி.பணி 4:23-31 தி.பாடல் 2:1-9 பு.யோ 3:1-8

## பரி.நற்செய்தியிலிருந்து

பரிசேயர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் நிக்கதேம்..... இயேசு அவரைப் பார்த்து "மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என மிக உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்" என்றார்... இயேசு அவரைப் பார்த்து "ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியினாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்லு கிறேன். மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர் தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர் தூய ஆவியால் நான் உமக்கு கூறியது பற்றி நீர் வியப்படைய வேண்டாம்....தூய ஆவியால் பிறந்த அனைவருக்கும் இது பொருந்தும்" என்றார்.

## ஒளியில் விழிப்புறுதல்

இயேசு, யோர்தான் நதியில் தாம் பெற்ற நீரினதும் தூய ஆவியினதும் திருமுழுக்குடன் தாம் எல்லாம் வல்ல வரின் ஒரே அன்பு மகன் என்பதற்கு உள்ளாகியதோடு இறைவல்லமை மகிமை என்பவற்றில் வெறுமையாகி அப்பா தந்தையின் கீழ்ப்படிவின் பணியாளராக செயற்பட்டார் அவரின் தூதுரைப்பணி தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதும் அதன் மூலம் தந்தையை மகிமையடையச் செய்வது மேயாகும். இயேசு ஆண்டவர் பரிசேயருடைய, மறைநூல் அறிஞருடைய உள்ளத்தைக் கண்டு அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் உவமைகள் மூலம் விளக்குகின்றார். பழையன கழிந்து புதிதாக ஒருவர் உருவெடுக்காவிட்டால் எப்பேர்ப்பட்ட ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தாலும் பயனில்லை என்பதை உறுதிபடுத்து கின்றார் தூய ஆவியானவருக்கு விழிப்புறுதல் அவருக்கு இடம் கொடுத்து வாழுதல் போன்றன வழியாக அப்பா தந்தையை மகிமைப்படுத்துவதற்கு முடியுமாகும். உலகத்தோர் பெருமையையும் புகழையும் பெற்று வாழ்வதற்கு பெரும் பாடுபடுகின்றார்கள் ஆனால் தூய ஆவியானவர் காட்டித்தரும் மரணத்தைத் தழுவிய வாழ்க்கையானது சதாகாலத்தை சேர்ந்தது. இந்த வாழ்க்கையைப் பெற்றவர்கள் பேறு பெற்றவர்கள் என இயேசு ஆண்டவர் கூறுகின்றார்.

## எம் பேரில்

ஆண்டவரின் திருப்பொழிவுடன் இறையரசிற்காக நாம் அழைப்பை பெற்றுள்ளோம். அழைப்பைப் பற்றி எமது அனுபவம் எத்தகையது பணம், கௌரவம், பதவி, சுயநலம் கருதி உலக ஆட்சிக்கு அடிமையாகுகிறோமா? எமது திறமைகள் உலக வாழ்வுக்கு பயன்படுத்து வதைவிட இறையாட்சிக்காக பயன்படுத்துவதே மேலானதாகும். ஏனென்றால் இலவசமாக கிடைத்திருப்பதை இலவசமாகவே கொடுக்க வேண்டும் நமக்கு கிடைத்திருப்பதோ விஷேசமான அழைப்பு பரிசுத்தமாகவும் மாசற்றவராகவும் வாழ்வதற்கும் கிடைத்திருக்கும் மாசற்ற அழைப்பிற்கு மாசற்ற விதத்தில் பதிலளித்து இறையரசை கட்டியெழுப்புவதற்கு வரம் கேட்டு செபிப்போம்.

## செபம்

அப்பா தந்தையே! உமது ஒரே மகனான இயேசு கிறிஸ்துவின் வழியாக எம்மை புதுபிறப்பாக மாற்றியமைத்ததிற்கு நன்றி. உயிர்த்த ஆண்டவரை அனுபவித்த வண்ணம் நித்திய கால வாழ்வை நோக்கி எம்மை இட்டுச் செல்வதற்காக தூய ஆவியானவரை பரிசாக கொடுத்தமைக்காக நன்றி. ஆண்டவர் பேரில் விசுவாசம் கொள்ளவும் திடமாக இறை ஞானத்திற்கு அடி பணியவும் தூய ஆவியானவரின் வல்லமையால் நிரப்பியருளும்.

ஆமென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011வைகாசி 03 செவ்வாய்**

**கொரி. 15:1-8** **புயோவான் 14:6-14**

**தி.பா.19:1-4**

## பரி.நற்செய்தியிலிருந்து

**இயேசு “அவரிடம் வழியும் உண்மையும் வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள், இது முதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள், அவரை கண்டும் இருக்கிறீர்கள்.” என்றார் அப்போது பிலிப்பு அவரிடம் “ஆண்டவரே எங்களுக்குக் காட்டும் அதுவே எங்களுக்கு போதும் என்றார்”. இயேசு அவரிடம் கூறியது பிலிப்பே இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்து கொள்ள வில்லையா? என்னைக் காண்பது தந்தையை காண் பதாகும்........... நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செயவேன்.**

## ஒளியில் விழிப்புறுதல்

'உண்மையும், வழியும், வாழ்வும் நானே' என்கிறார் இயேசு. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே இயேசு மனுவுருவாகினார். இயேசுவின் உள்ளந்தர நோக்கை நாம் புரிந்து கொள்ளாவிட்டால் தந்தையின் விருப்பத்தை எம்மால் நிறைவேற்ற முடியாது. இயேசுவின் தூதுச் சேவையின் ஒவ்வொரு கணமும் அவர் தந்தையின் ஒலிக்குச் செவிமடுத்தவராகவே இருந்தார், இயேசுவிற்க்கும் தந்தைக்கும் இடையில் இருந்த நெருங்கிய உறவைப் பற்றி அவர் பிலிப்புவிடம் கூறுகிறார்.' நான் உங்களுக்கு கூறுபவை நானாகக் கூறவில்லை என்னுள் இருக்கும் என தந்தை கூறுபவற்றையே நான் உங்களுக்கு கூறுகிறேன்.' இயேசுவின் உள்ளந்தர நோக்கமானது இயேசுவின் வார்த்தையிலும் அவரது செயல்களிலும் உண்மையான விசுவாசம் வைத்தால் தான் தந்தையின் இறையரசில் எம்மால் பங்கு கொள்ள முடியும் என்பதாகும். இன்றைய நாளில் விசுவாசத்தைப்பற்றி ஆண்டவர் இயேசு எமக்க வெளிப்படுதுகின்றார். நாம் எவ்வளவுக் கெவ்வளவு இயேசுவின் விசுவாசம் வைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு இயேசுவின் செயல்களும் எம்மில் வெளிப்படும் என்பததை இயேசு இன்று உறுதியாகக் கூறுகின்றார்.

## எம் பேரில்

இன்று திருச்சபையின் தாளானவள் புனித பிலிப்பு, புனித யாக்கோபு இவர்களின் விழாவை கொண்டாடுகிறாள் அன்று இயேசுவோடு உடனிருந்த சீடர்கள் இன்று அவர்கள் எமக்காக அவர்களுடைய வாழ்க்கை அனுபவத்தை கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்கள். யாக்கோபின் மடல்களை வாசிக்கும் போது அதிகமாக அவர் எம்மை விசுவாச வாழ்விற்குத் திருப்புகின்றார் பலவகைச் சோதனை களால் நீங்கள் சோதிக்கப் படும் போது மகிழ்ச்சியாய் இருங்கள் சோதனை களை மன உறுதியோடு தாங்குவோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்களது தகுதி மெய்பிக்கப்படும் போது தம்மீது அன்பு கொள்வோருக்கு கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றிவாகையினை அவர்கள் பெறுவார்கள் என்று யாக்கோபு அவருடைய நிருபத்திலே எழுதியிருக்கின்றார். எம்முடைய வாழ்கையிலே ஏற்படு கின்ற சோதனைகளை மன உறுதி யோடு தாங்கிக் கொள்வோமாக.

## செபம்

ஆண்டவரே! உம்முடைய படைப்பை உற்று நோக்கும் போது உம்முடைய மாட்சிமையை நாங்கள் காண்கின்றோம் இவ்வளவு மாட்சிமை பொருந்திய நீர் எங்கள் தந்தையாக இருக்கிறீர் சோதனைகளில் நாங்கள் சோர்வுறும் போது எங்கள் விசுவாசத்தை உறுதிபடுத்தியருளும் தந்தையே

ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 04 புதன்
தி.து.ப.5:17-26
பு.யோவான் 3:16-21
தி.பா.34:1-8

## பரி.நற்செய்தியிலிருந்து

தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்கு தண்டனை தீர்ப்பு அளிக்க அல்ல தம் மக்கள் வழியாக மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். அவர் மீத நம்பிக்கை கொள்வோர் தண்டனைத தீர்ப்புக்கு ஆளாவதில்லை ஆனால் நம்பிக்கை கொள்ளாதோர் ஏற்கனவே தீர்ப்புப் பெற்றுவிட்டனர். ஏனெனில், கடவுளின் ஒரே மகனிடம் நம்பிக்கை கொள்ள வில்லை ஒளி உலகிற்கு வந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியை விட இருளையே விரும்பினர்...

(முழுமையாக நற்செய்தியை வாசிக்கவும்)

## ஒளியில் விழிப்புறுதல்

தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதே கிறிஸ்துவின் உள்ளாழ தாகமாக இருந்தது. தந்தையின் அன்பை உணராமல் அவரின் அன்புக்கு எதிராக செயல்படும் மக்களை கிறிஸ்து காண்கின்றார். தந்தையின் திட்டத்தை நிறைவேற்ற மறுப்போரை தந்தை தம்முடன் இணைத்து கொள்ளப் போவதில்லை என்பதை வெளிபடுத்து கின்றார். காரணம் அனைவரையுமே தந்தையின் இறையரசுக்குள் ஒன்று சேர்ப்பதே கிறிஸ்துவின் பணியாக இருந்தது. அக்கால மக்கள் தண்டனை பெறுவதையிட்டு மிகவும் பயப்படு வார்கள் இதனால் விரும்பியோ விரும்பாமலோ சட்டதிட்டங்களுக்கு கீழ்படிவார்கள் காட்டுமிராண்டிகள் போல் வாழ்ந்த மக்களை இச்சட்டதிட்டங்களைக் கொண்டு தான் மோசே ஒரு நிலைப் படுத்தினார் இதனால் கிறிஸ்துவும் அவர்களுக்கு புரியும் விதத்தில் தந்தையின் அன்பை அனுபவிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகின்றார். யாரையும் பயமுறுத்துவதோ, நியாயந்தீர்ப்பதோ அவரது நோக்கமல்ல அனைவருமே இறையன்பை அனுபவித்து இறையரசில் இணைய வேண்டுமென்பதே அவரது வாழ்வின் இலட்சியமாக இருந்தது.

## எம்பேரில்

நான் வசிக்கும் சூழலில் போட்டி, பொறாமை நிறைந்தவர்கள் அதிகம் ஒருவருக்கொருவர் சிறு பிரச்சனையென்றாலும், பில்லி, சூனியம் என்று செயலிலே ஈடுபடுவார்கள் இதனால் ஒருவருக்கொருவர் பயம் என்ற சாத்தானுக்குள் அகப்பட்டு இருப்பதை கண்டு கொள்ளமுடிந்தது யாருக்கு நோய் ஏற்பட்டாலும், பிரச்சினை ஏற்பட்டாலும் அவர்கள் சிந்தனையில் தோன்றுவது யாரோ தங்களுக்கு பில்லி, சூனியம் செய்து விட்டார்கள் என்ற எண்ணமே எனக்கும் பல பிரச்சனைகள் வந்ததுண்டு நோய் ஏற்பட்டதுண்டு பொருளாதார பிரச்சனைக்கு முகம் கொடுத்துள்ளேன் இப்படி பல தோல்விகள் வந்ததுண்டு ஆனால் ஏனோ எனக்கு அப்படியான பயம் வந்ததில்லை 'அவரை விசுவசிப்பவர்களுக்கு அனைத்தும் நன்மைக்கேதுவாக மாறும்' என்ற ஆழமான விசுவாசமே, எனக்கு விடுதலை செய்த இறைவன் எமக்கு ஏற்படுகின்ற தொல்லைகள் என்ற சிறையிலிருந்து விடுதலை செய்யமாட்டாரா? ஒளியான கிறிஸ்து ஒருவரால் மட்டும் தான் எமக்கு விடுதலை கிடைக்க முடியும் அவரை விசுவசித்ததால் பல விடயங்களில் விடுதலை அடைந்துள்ளேன். நாம் அனைவரும் அவரை விசுவசித்து விடுதலையை அனுபவிப்போமாக!

## செபம்

எம்மை மீட்க வந்த இயேசுவே! 'உலகில் இருக்கும் வரை தொல்லை களுண்டு கலங்காதீர்கள்' என்று சொன்னவரே எங்கள் வாழ்வில் எந்நிலையிலும் உம்மை விசுவசித்து வாழ வரமருளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 05 வியாழன்
தி.து.ப. 5:27-33
தி.பா.34:1,8,16-19
பு.யோவான் 3:31-36

## பரி.நற்செய்தியிலிருந்து

மேலிருந்து வருபவர் அனைவரையும் விட மேலானவர் மண்ணுலகிலிருந்து உண்டானவர் மண்ணுலகைச் சேர்ந்தவர். மண்ணுலகு சார்ந்தவை பற்றியே அவர் பேசுகிறார் விண்ணுலகிலிருந்து வருபவர், அனைவருக்கும் மேலானவர் தாம் கண்டதையும் கேட்டதையும் பற்றியே அவர் சான்று பகர்கிறார் எனினும் அவர் தரும் சான்றை எவரும் ஏற்றுக் கொள்வதில்லை அவர் தரும் சான்றை ஏற்றுக் கொள்பவர் கடவுள் உண்மையானவர் என்பதை உறுதிபடுத் துகிறார். கடவுளால் அனுப்பப்பெற்றவர் கவுளின் வார்த்தைகளைப் பேசுகிறார் கடவுள் அவருக்குத் தம் ஆவிக்குரிய கொடைகளை அளவின்றி கொடுக்கிறார் தந்தை மகன் மேல் அன்பு கூர்ந்து அனைத்தையும் அவர் கையில் ஒப்படைத்துள்ளார். மகனிடம் நம்பிக்கை கொள்வோர் நிலை வாழ்வைப் பெறுவர் நம்பிக்கை கொள்ளாதோர் வாழ்வைக் காணமாட்டார் மாறாதக் கடவுளின் சினம் அவர்கள் மேல் வந்து சேரும்.

## ஒளியில் விழிப்புறுதல்

இயேசு ஆண்டவர் எப்பொழுதுமே தம்மை அனுப்பியவரைப் பற்றியே கதைக்கிறார். அதற்கான காரணம் அவர் எதைச்செய்தாலும் சொன்னாலும் தம்மை அனுப்பியவருக்குள் வாழ்ந்த வாறு நிலைத்தவாறே செய்கிறார், கூறுகிறார் தம்மை அனுப்பியவர்கே சான்று பகர்கின்றார்.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அனைவரும் உலகத்தை சாராதவர் களாக விண்ணுலகைச்சார்ந்தவாகளாக வாழ வேண்டும் என்பதனை முன் கொண்டே செயற்படுகின்றார் அதற்காக வேண்டியே அழைப்பு விடுக்கின்றார் தாம் கூறுபவற்றை ஏற்றுக் கொண்டு அதன்படி வாழ்பவருக்குக் கிடைக்கின்ற பரிசுகளைப் பற்றியும் கூறுகின்றார். "கடவுளால் அனுப்பப் பெற்றவர் கடவுளின் வார்த்தைகளைப் பேசுகிறார் கடவுளுக்குரிய கொடைகளை அளவின்றி கொடுக்கிறார்" கடவுளின் வார்த்தைகளைப் பேசாதவர்கள் பெறுவது???? மகனிடம் நம்பிக்கை கொள்வோர் நிலைவாழ்வு பெறுவர். நம்பிக்கை கொள்ளாதோர்....???

## எம் பேரில்

அன்றைய சீடர்கள் மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதை விட கடவுளுக்குக் கீழ்ப்படிந்ததற்கான காரணத்தினால் மரணத்தைத் தழுவிக்கொண்ட போதிலும் இறுதியில் நிலை வாழ்வைப் பெற்றனர் அதற்கான திடத்தையும், வல்லமையையும் ஆவியானவர் வழியாகப் பெற்றுக் கொண்டனர்.

நாமும் ஒருகணம் எம்மை மீளப் போர்போம்......

நான் விண்ணுலகைச் சார்ந்தவனா? மண்ணுலகைச் சார்ந்தவனா? மனிதருக்கா கீழ்ப்படிகிறேன்? கடவுளுக்கா கீழ்ப்படிகிறேன்? ஆவியானவரே உண்மையான என்னைக் காணச் செய்தருளும்......

**உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கிறார்**

**நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார்.**

**நேர்மையாளருக்கு நேரிடும் தீங்குகள் பல....**

**அவை அனைத்திலும் ஆண்டவர் அவர்களை விடுவிக்கின்றார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 6 வெள்ளி
தி.து.ப. 5:34-42
தி.பா.27:1,4,1-14
பு.யோவான் 6:1-15

## பரி.நற்செய்தியிலிருந்து

இயேசு கலிலேயக் கடலைக் கடந்து மறுகரைக்கு சென்றார் அதற்கு திபேரியக்கடல் என்றும் பெயர் உண்டு உடல் நலம் அற்றோருக்கு அவர் செய்து வந்த அரும் அடையா ளங்களைக் கண்டு மக்கள் பெரும் திரளாய் அவரை பின் தொடர்ந்தனர். இயேசு மலை மேல் ஏறித் தம் சீடரோடு அமர்ந்தார் யூதருடைய பாஸ்கா விழா அண்மையில் நிகழவிருந்தது. இயேசு நிமிர்ந்து பார்த்து மக்கள் பெருந்திரளாய் அவரிடம் வருவதைக் கண்டு இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்? என்று பிலிப்பிடம் கேட்டார். தாம் செய்யப் போவதை அறிந்திருந்தும் அவரைச் சோதிப்பதற்காகவே இக் கேள்வியை கேட்டார். பிலிப்பு மறுமொழியாக "இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறு துண்டும் கிடைக்காதே" என்றார்.

## ஒளியில் விழிப்புறுதல்

எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே! இந்நாளில் உமது சித்தம் போல் எம்மை நடத்திச் செல்லும் இன்றைய வெளிபாட்டினைத் தியானிக்கும் போது சீடர்களின் விசுவாசம் எந்த அளவு தூரம் இருப்பதைக் காணக்கூடியதாயிருக்கிறது இயேசு புதுமைகள் புரிவதைக் கண்டு மக்கள் அவரை நெருங்கி வருகிறார்கள் கஸ்டத்துடன் உள்ளார்கள் பசியுடன் வாடுகிறார்கள் என்று இயேசு ஆண்டவர் அவர்கள் பால் இரங்குகிறார் அவர்களை பசியுடன் வீடு அனுப்ப விரும்பாமல் அவர்களின் பசியை போக்க அவரால் முடியுமானாலும் தம் அன்புச்சீடரின் மனநிலையை அறிவதற்காக அவரிடம் வினவுகிறார். அதே வேளை பசி, தூக்கம் இல்லாமல் இறைமகன் இயேசு தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் ஒரே குறிக்கோளுடன் "நீரே என் அன்பார்ந்த மகன் நான் உம்மில் பூரிப்படைகிறேன்" என்ற தந்தையின் வார்த்தைக்கு அன்றும் விழிப்புற்றார் யோர்தான் நதிக்கரையில் அடிபணிந்து சிலுவையில் உயிர்விடுமட்டும் தன் நிலை மறந்து மக்கள் மேல் அன்பைச் சொரிந்தவர் தந்தையின் அன்பைக் கலந்து அவர்களது உடல், உள பசியை போக்குகின்றார்.

## எம் பேரில்

ஆயனில்லா மந்தைகளைப் போல் நாம் அங்கும் இங்கும் அலைந்து திரிகிறோம் எங்கு போனால் நமக்கு அமைதி, நிம்மதி, சந்தோஷம் கிடைக்கும் என்று அங்கலாய்த்து தவிக்கிறோம் இதை உணர்ந்த இயேசு என் அண்டை வாருங்கள் நான் உங்களுக்கு ஆறுதல் தருவேன். என்று அன்புக் கரம் நீட்டி எம்மை அழைக்கிறார். நாம் உலக ஆசைகளுக்கு அடிபணிந்து அவரின் வார்த்தைக்கு செவிமடுக்கிறோமா? என சிறிது சிந்திப்போம்.

**"நெஞ்சே ஆண்டவருக்காக காத்திரு. மன உறுதிகொள் உன் உள்ளம் வலிமை பெறட்டும் ஆண்டவருக்காகக் காத்திரு."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 07 சனி**

**தி.து.ப.6:1-7**

**பு.யோவான் 6:16-21**

**தி.பா.33:1-2,4-5,18-19**

## பரி.நற்செய்தியிலிருந்து

**மாலை வேளையானதும் இயேசுவின் சீடர்கள் கடற்கரைக்கு வந்து படகேறி மறுகரையிவுள்ள கப்பர்நாகுமுக்கு புறப்பட்டார்கள் ஏற்கனவே இருட்டிவிட்டது இயேசுவும் அவர்களிடம் அதுவரை வந்து சேரவில்லை அப்போது பெரும் காற்று வீசிற்று, கடல் பொங்கி எழுந்தது அவர்கள் ஐந்து அல்லது ஆறு கிலோமீற்றர் தொலை படகு ஓட்டிய பின் இயேசு கடல் மீது நடந்து படகருகில் வருவதைக் கண்டு அஞ்சினார்கள். இயேசு அவர்களிடம் "நான்தான் அஞ்சாதீர்கள்" என்றார் அவர்கள் அவரை படகில் ஏற்றிக் கொள்ள விரும்பினார்கள். ஆனால் படகு உடனே அவர்கள் போய் சேர வேண்டிய இடம் போய் சேர்ந்து விட்டது**

(முழுமையாக நற்செய்தியை வாசிக்கவும்)

## ஒளியில் விழிப்புறுதல்

என் ஆன்மாவின் அன்பார்ந்தவரான தூய ஆவியானவரே இந் நிகழ்ச்சி யின் பேரில் விழிப்புற்று இயேசு ஆண்டவரின் உள்ளாந்தரத்தை காண எம்மை வழி நடத்தியருளும் இயேசு ஆண்டவருடன் ஒன்றாக பயணம் செய்து, உண்டு குடித்து,உறங்கி அவர் செய்த புதுமைகளைக் கண்டிருந்த சீடர்களே படகில் பயணம் செய்தார்கள் பெருங்காற்றினால் படகு தள்ளாடு வதைக் கரையில் செபம் செய்து கொண்டிருந்த இயேசு அறிகிறார். சீடர்களின் மனித மட்டத்திலுள்ள மனப்பயத்தையும் காண்கின்றார் அதனால் அவர்களை தைரியப்படுத்த கடல் மீது நடந்து வருகிறார் சீடர்களோ அவரை காணாமல் பயப்படுகிறார்கள் இயேசுவோ "நான் தான் அஞ்சாதீர்கள்" என்று அன்போடு தைரியப்படுத்துகிறார் சீடர்கள் தூய அவியானவரைப் பற்றிய அனுபவத்தில் இராததினால் பயந்தார்கள். தூய அவியானவரைப் பெற்றுக் கொண்டபின் அவர்கள் இயேசு ஆண்டவரையும் அறிந்தார்கள், அனுபவித்தார்கள், அச்சத்திலிருந்து நீங்கினார்கள் உயிர்த்த ஆண்டவர் இருக்குமிடத்தில் பயத்துக்கு இடமில்லை.

## எம்பேரில்

"நான் தான் அஞ்சாதீர்கள்" என்ற நிரந்தரமான ஆண்டவரது ஒலிக்கு நித்தமும் எம்மில் செவிமடுக்க முடியுமாக இருக்கிறதா? நம்மிடையே வாழ்கையில் ஏற்படும் பயங்கரமான சம்பவங்களில் நாம் பயப்பட்டு அதைரியப்படும் நேரங்கள் தான் எத்தனை? தூய அவியானவருக்கு விழிப்புற்று "அஞ்சாதே நான் என்றும் உன்னோடு" என்று ஆண்டவரின் வெளிப்பாட்டை உரிமையாக்கிக் கொண்டு வாழ்கின்றோமா? சற்று விழிப்புறுவோம் ஆண்டவர் என்றும் எம்மோடு என்ற நிலையை உரிமையாக்கிக் கொண்டு வாழலாம்.

## செபம்

அப்பா தந்தையே!

உலக தேவைகளுக்காக மட்டும் இறைவனைத் தேடாமல் உண்மையான விசுவாசத்துடன் "அவர் என்னோடு இருக்கும் போது நான் எதற்கும் அஞ்சத் தேவையில்லை" என்ற நிலைக்குள் வாழ வரம் தந்தருளும் ஆமென்.

**"தமக்கு அஞ்சி நடப்போரையும், தம் பேரன்புக்காகக் காத்திருப போரையும் ஆண்டவர் கண்நோக்குகின்றார்."**

**(தி.பா.33:18)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011வைகாசி 08ஞாயிறு பாஸ்கா காலம் 03வது ஞாயிறு**
**தி.து.ப. 2:14,22-33 பு.லூக்.24:13-35**
**தி.பா.16:1-2,5,7-11 1பேதுரு1:17-21**

கிறிஸ்து உயிர்ப்பினை விசேஷ விதமாக அனுபவிக்கின்ற தியானிக்கின்ற பாஸ்கா காலத்தில் மூன்றாவது ஞாயிறு தினத்தை வந்தடைந்துள்ளோம். கிறிஸ்து நாதரின் உயிர்த்தெழுதலின் பேரானந்தத்தையும் அவரை சந்திப்பதன் மகிழ்வினையும் சேர்த்து அனுபவிக்கின்ற இக்காலப்பகுதியானது உண்மை யாகவே அக்களிப்பினை ஏற்படுத்துகின்ற காலப்பகுதியாகும்.

உண்மையாகவே நாம் இயேசு ஆண்டவரை இனங்கண்டு ள்ளோமா? அவர் எமக்கு அறிமுகமானவரா? எம்மாவுஸ் பயணத்தில் ஈடுபட்டிருந்த சீடர்கள் இருவரும் அப்பம் பிட்கும் போது அவரை இனங் கண்டு கொண்டனர். "நாம் அவரை அறிவோம்" என்று சீடர்களால், என்னால், எம்மால் அச்சமின்றிக் கூறுவதற்கு முடியுமா? "வழியிலே அவர் நம்மோடு பேசி மறை நூலை விளக்கும் போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று அன்று சீடர்கள் கூறியது போல இன்று எம்மத்தியில் வாழுகின்ற ஆண்டவரைச் சந்திக்கும் போது எமது உள்ளங்களும் பற்றி எரிகின்றனவா?

இயேசு ஆண்டவரே, எம்மோடு மறை நூலைப் பகிர்ந்து கொள்ளும் நீர் எம்மோடு பேசும் போது எம் உள்ளங்களைப் பற்றி எரியச் செய்தருளும்......

## முதலாவது வெளிபாட்டிலிருந்து

**அப்பொழுது பேதுரு பதினொருவருடன் சேர்ந்து எழுந்து நின்று உரத்த குரலில் அவர்களிடம் பின்வருமாறு கூறினார்."யூத மக்களே, எருசலேமில் வாழும் மக்களே இதைத் தெரிந்துக் கொள்ளுங்கள் எனது சொறகளைக் கவனித்துக் கேளுங்கள்.... கடவுள் தாம் வரையறுத்துள்ள திட்டத்தின் படியும் தம் முன்னறிவின் படியும் இந்த இயேசுவை உங்கள் கையில் விட்டு விட்டார். திருச்சட்டம் அறியாதார் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். ஆனால் கடவுள் அவரை மரண வேதனையினின்று விடுவித்து உயிர்த்தெழச் செய்தார் ஏனென்றால் மரணம் அவரைத் தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை...**

## ஒளியில் விழிப்புறுதல்

கிறிஸ்துநாதருடைய சீடனாக அவரோடு தங்கியிருந்து உண்டு குடித்து வாழ்ந்த பேதுருவானவரும் அவரைப் புறக்கணிக்கும் அளவிற்குப் பெலவீனமானார். அவரோடு நெருங்கி பழகியவர்கள் சில வேளைகளில் அச்சமுற்றனர் அவரை நம்ப முடியாதவர்களாக இருந்தார்கள் ஆயினும் கிறிஸ்துநாதரது வாக்குறுதி நிறைவேறுகின்ற பட்சத்தில் பேதுருவானவர் உட்பட தூதர்கள் அச்சம் நீங்கியவர்களாக ஒளிமயப் படுகிறார்கள். அவர்கள் புதியதொரு வல்லமையை பெறுகிறார்கள். மீனவரான பேதுரு வானவர் ஆவியானவரது திருப் பொழிவிற்கு ஆளாகிறார் புத்துயிர் பெற்றவர்கள் போலானார்கள் அவர்கள் வழியாகப் பலர் குணமடைந்தார்கள். இயேசு ஆண்டவரது வாழ்கை அனுபவத்திற்கே அவர்களும் ஆளானார்கள்.

**"தூய ஆவி வரும் போது நீங்கள் வல்லமை பெறுவீர்கள்"**

## பரி.நற்செய்தியிலிருந்து

அதே நாளில் சீடர்களுள் இருவர் எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோமீட்டர் தொலையிலுள்ள ஓர் ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். அவ்வூரின் பெயர் எம்மாவு அவர்கள் இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் குறித்து ஒருவரோடு ஒருவர் உரையாடிக் கொண்டே சென்றார்கள்.... இயேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி வந்து அவாகளோடு நடந்து சென்றார் ஆனால் அவர் யாரேன்று அறிந்து உணர முடியாதவாறு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன...... அவர்கள் தாங்கள் போக வேண்டிய ஊரை நெருங்கி வந்தார்கள் ..... அவர்கள் அவரிடம் "எங்களோடு தங்கும் ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று பொழுதும் போயிற்று" என்று கூறிக் கட்டாயப்படுத்தி அவரை இணங்க வைத்தார்கள் .....அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்த போது ....... அப்போது அவர்களின் கண்கள் திறந்தன அவர்களும் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள் உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்து போனார்

## ஒளியில் விழிப்புறுதல்

உயிர்த்தெழுந்த ஆண்டவர் தமது உயிர்த்தெழுதலின் தனித் தன்மைப் பற்றிய உன்னதமானோர் நற்செய்தியை இன்றைய வெளிப்பாடு வழியாக வெளிப்பாடாக்கு கின்றார் எம்மாவு நகரை நோக்கிச் சென்ற சீடருள், இஸ்ரவேல் மக்களுள் இருந்த எதிர்ப் பார்பதே அவர்களுக்கும் இருந்ததை காண்பதற்கு முடியுமாகிறது. நம்பிக்கை இழந்தவர்களாக இருந்த அவர்களை நெருங்குகின்ற இயேசு ஆண்டவர் மீண்டும் அவர்களது நம்பிக்கையைப் புத்துயிர் பெறச் செய்கின்றார். அவர்களை அண்மித்து அவர்களுக்கு செவிமடுத்தவாறு அவர்களது வேதனையில் பங்கேற்கும் அவரை இனங்கண்டு கொள்ளவில்லை நேரங்கடந்து விட்டதால் அவர்களோடு இராப் பொழுதை களிப்பதற்கு ஆயத்தமாகின்றார் ஒற்றுமையின் அடையாளமாகிய உணவு உண்பதற்கு அமர்ந்து அப்பத்தைப் பிட்கையில் தான் சீடர்கள் அவரைக் கண்டுகொள்கி றார்கள்.'இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாக கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்' என்று அவர் அளித்த வாக்குறுதி இன்று அவர்கள் முன்னிலையிலேயே நிறைவேறியது. அவரது வார்த்தையின் வல்லமை அவர்களை ஸ்பரித்தது அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றி பிட்டு அவர்களுக்கு கொடுக்கும் போது அவர்கள் ஆண்டவரது கடந்து போதலின் புனிதமான பாஸ்காவை அநுபவித்தார்கள்.

உயிர்த்த ஆண்டவர் என் வழியாகவும் வெளிப்படலாம் ஆயினும் எனக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தடைகள் வேதனைகள், பிரச்சனைகள் போன்றவற்றை மேம்பட்டுச் சென்று சாட்சிய பகருகின்ற ஆவியானவரது வழிநடத்துதல் எனக்குள் இருக்கின்றதா????....

## இரண்டாவது வெளிபாட்டிலிருந்து

**நீங்கள் 'தந்தையே' என அழைத்து மன்றாடுபவர், ஆளைப் பார்த்தல்ல,அவரவர் செயல்களின் படியே தீர்ப்பு வழங்குகின்றார். ஆகையால், நீங்கள் அன்னியராய் வாழும் காலமெல்லாம் அவருக்கு அஞ்சி வாழுங்கள்..... உலகம் தோன்று முன்னரே முன்குறிக்கப்பட்ட அவர், இந்தக் கடைசிகாலத்தில் உங்களுக்காக வெளிப்படுத்தப்பட்டார். அவர் வழியாக தான் நீங்கள் கடவுள் மீது நம்பிக்கை கொண்டுள்ளீர்கள். இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்து பெருமைப்படுத்தியுள்ளார்......**

## ஒளியில் விழிப்புறுதல்

கிறிஸ்தவர்களாகிய நாம் எதிர்பார்ப்பற்ற, தனிமைப்படுகின்ற. மக்கள் ஆவதற்காக வேண்டி அழைக்கப்பட்டவர்கள் அல்ல, பாவிகளாகிய நாம் அனைவரும், கிறிஸ்துவின் திருக்குருதியினால் புனிதப்படுத்தப் பட்டவர்களாவோம். உங்கள் பெறுமதிகளால் ஈர்க்கப்படுகின்ற எம்மை ஒளிமையப்படு த்துவதற்காக வேண்டி ஆவியானவருக்கு இடமளிப்போம்.

தூய ஆவியானவரே, வழமையான எமது வழிப்பயணத்தை நிறுத்திவிட்டு, நீர் காண்பிக்கின்ற வழியில் செல்வதற்காக எம்மை வழிநடத்தியருளும் எம் இதயங்களை ஒளிமயப்படுத்தியருளும். எனக்குள்,எமக்குள் , சங்கத்துக்குள், பங்குக்குள், தேசத்துக்குள் மறுவுறுவாகியிருக்கின்ற இயேசு ஆண்டவரை அனைவருக்கும் வெளிப்பாடாக்குவதற்கான வல்லமையைத் தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011வைகாசி 09 செவ்வாய்
தி.து.ப.6:8:15 பு.யோவான் 6:22-29
தி.பா.119:23-24,26-30

## பரி.நற்செய்தியிலிருந்து

சீடர்கள் புறப்பட்ட கரையிலேயே மறு நாளும் மக்கள் கூட்டமாய் நின்று கொண்டிருந்தார்கள் முந்தின நாள் ஒரு படகை தவிரவேறு படகு எதுவும் அங்கு இல்லை என்பதையும் அதில் இயேசுவின் சீடர்கள் மட்டும் போனார்களே அன்றி இயேசு அவர்களோடு அப்படகில் ஏறவில்லை என்பதையும் அவர்கள் கண்கூடாக பார்த்திருந்தார்கள். அப்போது ஆண்டவர் கடவுளுக்கு நன்றி செலுத்திக் கொடுத்த உணவை மக்கள் உண்ட இடத்திற்கு அருகில் திபேரியாவிலிருந்து படகுகள் வந்து சேர்ந்தன இயேசுவும் அவருடைய சீடரும் அங்கு இல்லை என்பதைக் கண்ட மக்கள் கூட்டமாய் அப்படகுகளில் ஏறி இயேசுவை தேடி கப்பர் நாகுமுக்குச் சென்றனர். அங்கு கடற்கரையில் அவர்கள் அவரைக் கண்டு 'ரபி எப்போது இங்கு வந்தீர்' என்று கேட்டார்கள் இயேசு மறுமொழியாக 'நீங்கள் வயிரார உண்டதால் தான் என்னைத் தேடுகிறீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் அழிந்து போகும் உணவுக்காக....' என்றார் அவர்கள் அவரை நோக்கி எங்கள் செயல்கள் கடவுளுக்கு ஏற்றவையாக இருப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்.

## ஒளியில் விழிப்புறுதல்

பூவுலகெங்கும் அசைவாடுகின்ற தூய ஆவியானவரே! நீர் ஒளியாக வந்து எம் திருமகனாம் இயேசுக்கிறிஸ்து ஆண்டவரின் திருவாய்மலர்ந்த உயிருள்ள வார்த்தைகளைப் புரிந்து கொள்வதற்கு உமது ஞானக் கொடைகளை எம் ஒவ்வொருவருக்கும் பொழிந்து இந்நற்செய்தி வாசகத்தை வல்லமைப் படுத்தியருளும். மக்கள் நம் ஆண்டவராம் இயேசுவைத் தேடித் தேடி அலைவதைக் காண முடிகிறது. ஏனெனில் அவர் பாலைவனத்தில் பகிர்ந்தளித்த உணவின் சுவையோ அவர்களை மகிழ்வித்த வண்ணம் இருந்தபடியால் மக்கள் கூட்டம் அங்கும் இங்குமாக கலவரத்துடன் தேடுகின்றனர். இவர் பகிர்ந்தளித்த உயிருள்ள உணவோ மக்களை ஆட்கொண்டது இன்னும் இன்னும் இவ்வுணவை உண்பதால் அவர்களின் இவ்வுலக வாழ்வில் அனுபவிக்க வேண்டிய எல்லா நலன்களையும் காண்கிறார்கள் உணருகிறார்கள் எப்படியோ தேடித் திரிந்து கண்டு பிடிக்கிறார்கள். அவர் அருள்வாய் மலர்ந்து மொழிகின்றார் நீங்கள் அழிந்து போகும் உணவுக்காக உழைத்திட வேண்டாம் என்றும் அழிந்திடாத உணவுக்காக உழையுங்கள். ஏனெனில் நானே உயிர் தரும் ஜீவஅப்பம் என்று மொழியும் பொது மக்களோ ஆச்சரியப் படுகின்றனர் அல்லவா?

## எம்பேரில்

திவ்விய நற்கருணை ஆண்டாகப் பிரகடணப்படுத்தப்பட்டுள்ள இவ்வாண்டை அப்பா தந்தையானவர் பரிசாகவே நம் கத்தோலிக்க திருச்சபைக்குப் பொழிந் திருப்பது எத்துணை மகிழ்ச்சிமிக்க செயலல்லவா? ஏனெனில் உலகம் இவரைக்காண்பதுமில்லை அறிவதுமில்லை நாமோ இவரை அறிந்திருக்கின்றோம் விசுவாசிக்கிறவனுக்கு எல்லாமே கூடும். சிறு அப்பத்துண்டில் ஒரு சிறை கைதியை போல் இராப்பகலாக வீற்றிருந்துக் கொண்டு மனிதரால் வருகின்ற புறக்கணிப்புக்க ளுக்கும், அவமானங்களுக்கும், தேவதுரோகங்களுக்கும் பரிகாரமாக வீற்றிருப்பவருக்கு இறையரசுக்குரிய மக்களாக அழைப்பு பெற்ற நாம் இவருடைய பாடுகள், மரணம், உயிர்ப்புக்கு எவ்விதம் சாட்சியாகின்றோம். நொந்த நைந்த உள்ளங்களுக்குள் இவரின் உயிர் மூச்சான திருவுடலல்லவா வாழுகி ன்றது இவரை முழுமையாக ஏற்றுக் கொள்ளாத சந்தர்ப்பங்களுக்காக மன்னிப்பு வேண்டி மன்றாடுவோமாக.

## செபம்

மன்னா உண்ட முன்னோரெல்லாம் மடிந்து போயினர் எம் மன்னன் உம்மை உண்ட எவரும் மடிவதேயில்லை என வாக்குறுதி மொழிந்த அன்பான இயேசு ஆண்டவரே! என் சின்ன இதயங்களுக்குள் எழுந்தருளி வந்து உமது திருவுளத்தை மாத்திரம் நிறைவேற்றுவதற்கான வல்லமையையும், விழிப்புறுதலையும் தந்தருளும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2011வைகாசி 10 செவ்வாய்
தி.து.ப.7:51-8:1 பு.யோவான் 6:30-35
தி.பா.31:2-3-7,16-20

## பரி.நற்செய்தியிலிருந்து

அவர்கள் நாங்கள் கண்டு உம்மை நம்பும் வகையில் நீர் என்ன அரும் அடையாளம் காட்டுகிறீர்? அதற்காக என்ன அரும் செயல் செய்கிறீர்? எங்கள் முன்னோர் பாலைநிலத்தில் மன்னாவை உண்டனரே! "அவர்கள் உண்பதற்கு வானிலிருந்து உணவு அருளினார். என்று மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா!" என்றனர்.... "உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்: வானிலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோசே அல்ல: வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு அருள்பவர் என் தந்தையே ....."அவர்கள் ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும் என்று கேட்டுக் கொண்டார்கள். இயேசு அவர்களிடம்,"வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது: என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது."...

## ஒளியில் விழிப்புறுதல்

இன்றைய முதலாம் வெளிப்பாட்டில் புனித முடியப்பர் மக்களைப் பார்த்துத் திமிர்பிடித்தவர்களே, இறைவார்த்தையைக் கேட்க மறுக்கும் செவியும், உள்ளமும் கொண்டவர்களே, உங்களுடைய மூதாதையரைப் போல நீங்களும் தூயஆவியாரை எப்போதும் எதிர்க்கிறீர்கள் என்று கூறுகிறார். இயேசுவிடத்திலும் அரும் அடையாளங்களைச் செய்துகாட்டும் படி கேள்வி எழுப்பினார்கள் தூய ஆவியால் நிறைந்து பகிரங்க வாழ்வை ஆரம்பித்த இயேசு உடல் நோய்களைக் குணப்படுத்தி ஐயாயிரம் பேருக்கு உணவளித்து, இறந்தவர்களை உயிப்பித்த தம்மிடத்தில் இன்னும் பல அரும் அடையாளங்களைக் காட்டினா லேயே உம்மை நம்புவோம் என்று கூறுபவர்களை நினைத்து எவ்வளவு மனம் வருந்தியிருப்பார் மூதாதையர் மேல் வைத்துள்ள நம்பிக்கை மட்டில்: சிறிதளவேனும் இறை தந்தையால் இல்லாததைக் காண்கின்றதினாலேயே வானிலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோசே அல்ல என் தந்தையே என்று கூறுகிறார். மக்களை விழிப்புள்ளவர்களாக்கிக் தந்தையின் அன்பை உணர வைக்கிறார்.

## எம் பேரில்

"நானே வானில் நின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு. இதை யாராவது உண்டால் அவர் என்றுமேவாழ்வார்." இப்பாடல் வரிகளை வெறும் வாய்ச்சொல்லாகவா இல்லாவிடில் உண்மையாகவே நல்வாழ்விற்கு உணவாக்கிக் கொண்டா பாடுகின்றோம். ஆம் தூய ஆவியால் நிரப்பி அவ்வுணவைப் பெறுபவர்களுக்குப் பசியே இராது அவரில் நம்பிக்கைக் கொண்டு தங்கி வாழ்பவர்க்குத் தாகம் வராது. இயேசுவை என் வாழ்வில் ஆண்டவராக ஏற்ற கனம் முதல் இன்றுவரை என் வாழ்வில் அனுபவிக்கிறேன். பசியா, பட்டினியா, இன்னாலா, நோய்நொடியா எதுதான் என்னை ஆண்டவரின் அன்பிலிருந்து பிரிக்க முடியும் என்ற புனித சின்னப்பர் கூறிய அதே வார்த்தையை உரிமையாக்கிக் கொண்டுள்ளேன் "இயேசுவே எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்" என்று புனித ஸ்தோவான் உரைத்தது போல மரணபரியந்தம் வரைக்கும் இயேசுவின் பின்னால் நானும் செல்வேன். திரும்பிப் பார்க்காதிருக்க தூய ஆவியானவரிடம் வல்லமையை வேண்டுகிறேன்.

## செபம்

அன்பின் இயேசுவே ஆண்டவரே!எமது வாழ்வின் ஒவ்வெரு கட்டமும் உமது கையில் உள்ளது. உமது முகத்தின் ஒளி பெவயீனனான என்மீது வீசும்படி செய்யும். கலக்கமுற்ற நிலையில் உமது பேரன்பால் என்னை விடுதலையாக்கி நிறைவளிக்கின்றீரே இயேசுவே. நன்றி இயேசுவே.

ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011வைகாசி 11 புதன்கிழமை
தி.து.ப.8:1-8
பு.யோவான் 6:35-40
தி.பா.66:1-3,4-7

## பரி.நற்செய்தியிலிருந்து

**இயேசு அவர்களிடம் "வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்கு பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது. ஆனால், நான் உங்களுக்குச் சொன்னவாறே நீங்கள் என்னைக் கண்டிருந்தும் நம்பவில்லை தந்தை என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிட மாட்டேன் ஏனெனில், என் சொந்த விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன். அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதிநாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம் நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்." என்று கூறி னார்.**

## ஒளியில் விழிப்புறுதல்

ஆவியானவரே! என் இயேசுவின் அன்பு உள்ளரங்கத்தை நான் புரிந்து கொள்ள எனக்கு உதவியருளும். 'என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நாம் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்'என்று கூறும் இயேசு ஆண்டவர் அனுப்பியவரின் விருப்பம் என்ன என்பதையும் இன்றைய நற்செய்தி வழியாக தெளிவுபடுத்துகிறார் அதாவது 'அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் அதாவது மீட்புக்காக தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்தெழச் செய்யவேண்டும் என்பதே 'அனுப்பியவரின் திருவுளம்' என்பது அவரது உள்ளரங்கமாக இருக்கின்றது போலும். அதிலும் மகனாகிய இயேசு கிறிஸ்துவை (தன்னைக்) கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலை வாழ்வு பெற வேண்டும். என்பதே (அனுப்பியவர்) தந்தையின் திருவுளம் என்றும் விபரிக்கிறார் மேலும் அவர்களை இறுதி நாளில் நான் உயிர்த்தெழச் செய்வேன் என்றும் ஆணித்தரமாக கூறுகிறார். அனைவருக்குமே வாழ்வு தருகின்ற அப்பா பிதாவானவரிடமிருந்து தூய ஆவியானவர் வழியாக தாம் பெற்றுக் கொள்ளுகின்ற, அனுபவிக்கின்ற நிலையான வற்றாத அன்பினை தம் வழியாக அனைவருக்கும் அளிக்க வேண்டும் தம் வழியாக பெறுகின்ற அன்பு வழியாக அனைவருமே நிலையான, உறுதியான விடுதலையைப் பெற வேண்டுமென்ற ஆவலுடன் செயற்படுகின்றார்.

## எம் பேரில்

நாம் இயேசுவைக் கண்டுள்ளோமா? இயேசுவில் முழு நம்பிக்கை வைத்திருக்கிறோமா? அல்லது அவர் தரும் உணவுக்காக, அவர் செய்த நற்செயலுக்காக, புதுமைகளை காண்பதற்காக அவர் பின்னே அலையும் கூட்டமா நாம்?

சில வருடங்களுக்கு முன்னர் எமது பங்கு ஆலயத்தில் ஒரு ஊழியக்காரர் மூலம் குணமளிக்கும் வழிபாடு ஒன்று நடந்தது அதற்கு ஆள் சேர்க்கும் வண்ணம் அவர்கள் கொடுத்த விளம்பரமானது இதுதான் இக் கூட்டத்தில் கலந்து கொள்வோர் அனைவருக்கும் தேநீரும் மதிய உணவும் வழங்கப்படும் என்பதாகும். அன்றைய தினம் ஆலயம் கொள்ளாத அளவுக்கு சனக்கூட்டம் அதிகமானோர் அங்கு நடந்த செபத்திலோ வழிகாட்டு தலிலோ கலந்து கொள்ளாமல் உணவைப் பெற்றுக் கொள்வதற்காகவே வந்திருந்தமை மிகமிக கவலைக்குரிய விடயமாக இருந்தது. உணவு கிடைத்ததும் மாலை வரை இருந்த வழிபாடுகளில் கலந்து கொள்ளாமல் பாதிப் பேர் சென்று விட்டார்கள் இவர்கள் எவ்வாறானவர்கள்? அப்படிப் பட்டவர்களா????

## செபம்

அன்பின் ஆண்டவரே!

அரும் அடையாளங்கள் காண்பதற்காக உம்மை தேடி அலையாமல் உமது நாமத்தில் கூடுகின்ற இடங்களில் நீர் உயிரோடு இருக்கிறீர் என்ற விசுவாசத்துடன் உம்மைக் கண்டு, நம்பி உமக்கு உகந்த வாழ்வு வாழ்ந்து இறுதி நாளில் உயிர்த்தெழுந்து உம்மோடு அப்பாவின் சந்நிதியில் வாழும் நிலை வாழ்வு எனும் பாக்கியத்தினைப் பெற்றிட வரமருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 12 வியாழன்**
**தி.து.ப.8:26-40** **பு.யோவான் 6:44-51**
**தி.பா.66:8-9,16-17,20**

## பரி.நற்செய்தியிலிருந்து

**என்னை அனுப்பிய தந்தை ஈர்ந்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது என்னிடம் வருபவரை நானும் இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன் "கடவுள் தாமே அனைவருக்கும் கற்றுத் தருவார்," என இறைவாக்கு நூலில் எழுதியுள்ளது. தந்தைக்கு செவிசாய்த்து அவரிடமிருந்து கற்றுக் கொண்ட அனைவரும் என்னிடம் வருவர்.... உறுதியாக உங்களுக்குச் சொல்லு கிறேன். என்னை நம்புவோர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர். வாழ்வு தரும் உணவு நானே உங்கள் முன்னோர் பாலைநிலத்தில் மன்னாவை உண்டபோதிலும் இறந்தனர். உண்ப வரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த இந்த உணவே "விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த வாழ்வு தரும் உணவு நானே இந்த உணவை எவரேனும் உண்டால் அவர் என்றுமே வாழ்வார்.எனது சதையை உணவாக கொடுக்கிறேன் அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்.**

## ஒளியில் விழிப்புறுதல்

அன்பின் தேவ நற்கருணையிலே அழியாப் புகழோடு வாழ்பவரே அன்புப் பாதையில் வழிநடந்தே உம்வார்த் தைகளைத் தியானிக்க துணை செய்வீர்! இறைதந்தையின் அன்பில் பூரணநிறைவு பெற்ற ஒவ்வொருவரும் நிலையான வாழ்வை பெறவேண்டும் என்பதும் அதனை நிறைவேற்றுவதும் எனது பொறுப்பும் கடமையுமாகும் என்பதும் இறைமகன் இயேசுவின் உள்ளரங் கத்தில் பதிந்திருந்த ஒரு உண்மை யாகும் வாழ்வு அளிக்கும் உணவு நானே என்று கூறும் இயேசு மீட்பு திட்டத்தின் நோக்கினை மனதில் கொண்டு தன்னையே பலியாக ஒப்புகொடுப்பதற்குமுன்பே தம் திருவுடலையும் திருக் குருதியையும் மக்களுக்கு வாழ்வளிப்பதற்காக தியாகம் செய்கிறார் அன்று மக்கள் பெற்ற உடற் பசியை போக்கும் மன்னாவை விட ஆன்மீகப் பசியை போக்கும் வாழ்வளிக்கும் உணவைப் பகிர்ந்து அளிப்பதில் சகலருடனும் சங்கமமா கின்றார். தன்னை உடைத்து பகிர்ந்தளிப்பது உலகம் வாழ்வதற்காகவே என்று கூறும் பொழுது ஆன்மீக வாழ்வுக்கு இவ்வுணவு முக்கியம் என்பது தெளிவாகின்றது.

## எம் பேரில்

உலகம் வாழ்வதற்காக வேண்டி தன்னையே அளிக்கும் இயேசு ஆண்டவர் மக்கள் அவரில் நம்பிக்கை வைத்து அவருடன் இணைந்து வாழ்ந்து விண்ணரசை உரிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்பத அவரது திருவுளம் ஆகியது இயேசு எமக்கு பெற்றுத் தந்த திவ்விய நற்கருணை என்னும் அருட்சாதனம் எம் வாழ்விற்கு இன்றிய மையாததாக அமைந்துள்ளது. இதன் பெரில் நாம் எத்துணை விழிப்புறுகிறோம் உயிருள்ள ஆண்டவர் தம்மை அப்ப வடிவத்தினுள் உள்ளடக்கி அனைவருக்கும் உயிரூட்டுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார். நாம் உரிய வணக்கத்துடன் அவரை அணுகாத தவறுகளுக்காக மனம் வருந்துவோம் எம் வாழ்வில் நாளாந்தம் அவரைப் பெற்றுக் கொள்ளத் தாகம் கொள்வோம். ஆன்மீக இருளிலிருந்து விடுதலை பெற்று நிலை வாழ்வை நோக்கிப் பயணம் செய்வோம்

## செபம்

அழிந்து போகும் சரீரத்திற்காக அயராது உழைக்கும் நாம் வாழ்வளிக்கும் திவ்விய நற்கருணை நாதரை விசுவாசத்தடன் உற்று நோக்குவோம் எமது பெலயீனங்களுடனும், முடியாத்தன்மையுடனும், பாவ நிலையுடனும் அவர் முன் தோன்றும் நாம் எமது தவறுகளுக்காக மனம் வருந்துவோம் அவர் குரல் ஒலி எமக்கு கேட்டும். வெறுமையாகி இடமளிப்போன் உயிருள்ள உணவாம் இயேசு ஆண்டவரை நமஸ்கரிப்போம்! ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011வைகாசி 13 வெள்ளி
தி.து.ப.9:1-20 தி.பா.117:1-2,
எசாயா.61:9-11 தி.பா.45:11-12,14-17

பு.யோவான் 6:52-59
அல்லது
பு. லூாக்கா 11:27-28

## பரி.நற்செய்தியிலிருந்து

**நாம் உண்பதற்கு இவர் தமது சதையை எவ்வாறு கொடுக்க இயலும்? என்ற வாக்குவாதம் இவர்களிடையே எழுந்தது.... எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்பவர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளார் நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழ செய்வேன். எனது சதை உண்மையான உணவு எனது இரத்தம் உண்மையான பானம் எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்போர் என்னுடன் இணைந்திருப்பர் நானும் அவர்களுடன் இணைந்திருப்பேன் வாழும் தந்தை என்னை அனுப்பினார் நானும் அவரால் வாழ்கிறேன். அது போல என்னை உண்போரும் என்னால் வாழ்வர்.....**

## முதலாம் வெளிபாட்டிலிருந்து

....பிற இனத்தவருக்கு எனது பெயரை எடுத்து செல்ல நான் தேர்ந்து கொண்ட கருவியாய் சவுல் இருக்கிறார்......

## ஒளியில் விழிப்புறுதல்

ஆவியானவரே! எம்முடன் இணைந்திருந்து நேர்வழியைக் காண்பிப்பவரே! மறைபொருளைத் தேர்ந்து தெளியும் வரத்தால் எம்மை வழிநடத்தும்.

மனித அறிவால் இறைமகனின் வார்த்தையைப் புரிந்து கொள்ள முடியாத யூதர்கள் இயேசு நாதரின் வாழ்வு தரும் உணவை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். மறை இரகசியமான வெளிபாட்டினை இறை மகனானவர் முன் வைக்கின்றார் வாழ்வு பெற உணவு அவசியம் உணவைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் இறந்து விடுவார்கள். சதை இரத்தம் இரண்டும் இணைந்து செயல் புரியாவிடில் அங்கே மரணம் இறந்தவரின் உடலில் இரத்த ஓட்டம் கிடையாது ஆகவே நீங்கள் வாழ்வு பெற விரும்பின் என்னோடு இணையுங்கள் ஒரே உடலும் உள்ளமும் கொண்டு அனைவரும் வாழ்வோம் எனும் உன்னத அழைப்பைக் கொடுக்கின்றார். வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன். அது போல என்னை உண்போரும் என்னால் வாழ்வர். உறவின் ஆழம் வாழ்கையை வளமுடையதாக்குகின்றது. ஒருவரால் தனித்து எதையுமே செய்ய முடியாது. நான் தந்தையோடு கொண்டுள்ள உறவின் ஆழம் எனக்கு வாழ்வைக் கொடுக்கின்றது என்று ஆன்ம உணவைப் பெற்றுக் கொள்ள அழைக்கிறார்.

முதலாம் வெளிப்பாட்டைத் தியானிக் கையில், "சவுலே சவுலே ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்!" ஒளியாய் ஆண்டவரின் உணவு சவுலை வந்தடைகின்றது. திடுக்குறும் சவுல் அச்சம் கொண்டவராய் எழுந்து நிற்கின்றார். அவரது கண்கள் ஒளியை இழந்து எதையும் கண்டு கொள்ள முடியாது அல்லலுறுகின்றார். என்ன? ஏன்? எதற்காக? இப்படி நிகழ்ந்தது. உணவருந்தாமல் காத்திருக்கையில் ஆண்டவரின் புத்துயிர் ஊட்டும் உணவு அவருக்கு கிடைத்து புதுப்பார்வை அடைகிறார். பிற இனத்தவர்களுக்கு எனது அறிவிக்கும் ஒளியாக்குகின்றேன். கடந்து வந்த இருளான எண்ணம், நோக்கம், சிந்தனை, சொல், செயல் அனைத்தும் ஒளியாக்கின்றது.

ஆகவே, இன்று நாமும் வாழ்வு வழங்கும் அவரது சதையை இரத்தத்தை அருந்தி அவருடன் சங்கமிப்போம். அவருடன் ஒரே உடலாகுகையில் அவர் எமக்குள் செயலாற்றுவார். திருவிருந்தில் பங்கு கொண்டு அவரது வாழ்வு வழங்கும் வார்த்தையால் மற்றவரை போசிப்போம். புனிதராகிய பவுலைப் போன்று நாமும் புனிதராகி இயேசு ஆண்டவரின் திருநாமத்திற்கு சாட்சி பகர்வோம்.

## செபம்

பிற இனத்தாரே! நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்! மக்களினத்தாரே! நீங்கள் அனைவரும் அவரைப் புகழுங்கள். ஆண்டவர் நமக்குக் காட்டும் அன்பு மாறாத அன்பு மிகப் பெரியது. அவரது உண்மை என்றென்றும் நிலைத்துள்ளது.

அல்லேலூயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011வைகாசி 14 சனிக்கிழமை
தி.து.ப.1:15-17,20-26
தி.பா.113:1-8
பு.யோவான் 15:9-17

## பரி.நற்செய்தியிலிருந்து

என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள் மீது அன்பு கொண்டு ள்ளேன் என் அன்பில் நிலைத்தி ருங்கள் நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது.... ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்கு கொடுப்பார். நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை.

## ஒளியில் விழிப்புறுதல்

உள்ளாழத்தை உய்துணரும் தூய ஆவியே, ஆண்டவரது அனுபவத்தினை உய்த்துணர்ந்திட எமக்கு உமது வல்லமையை தாரும் மீட்பரின் உயித்தெழுதலின் மூன்றாம் வாரத்தில் இருக்கும் எமக்கு இன்று இயேசு அன்பின் கட்டளைகளை எடுத்து உரைக்கின்றார். தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை நான் கட்டளை இடுவதை யெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள் என்கிறார். படைப்பாளராம் இயேசு எமக்காக தலைவர்,அதிகாரம் படைத்தவர், படைப்புஎன்ற நிலையிலிருந்து வெறுமையாகி நண்பர் என்றால் இரு நண்பருக்கிடையில் ஒளிவு,மறைவு வேற்றுமை என்பன மறைந்து சமத்தவமான நிலையே "நண்பர்" என்ற நெருக்கம் இருக்கும் இயேசுவும் எமக்காக எம் ஒவ்வொருவ ருக்குள்ளும் நண்பர் என்ற அன்பு கட்டளையை நிறைவேற்றுகிறார்.

## நினைவில் கொள்வதற்கு

கடந்த டிசம்பர் மாதப் பகுதியில் எமது நாடு, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் இயற்கையின் சீற்றத்தினால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இங்கே அவுஸ்ரேலியாவில் அம்மாவும் இரு பிள்ளைகளும் வாகனத்தில் செல்லும் போது வெள்ளம் கரைபுரண்டோடியது இவ்வேளை இவர்களைக் காப்பாற்ற ஹெலிகப்டர் ஒன்று வந்தது இதிலே மூத்த மகள் (13வயது) தாயையும், தம்பியையும் காப்பாற்றினாள் ஆனால் இவரை காப்பாற்ற வந்தவேளை வாகனமும் சேர்ந்து தண்ணீர் அடித்துச் சென்றுவிட்டது இறுதிக்கிரிகைகளின் போது இவருடைய தந்தை இம்மாதிரியான பிள்ளையை பெறாத நான் என்ன தவம் செய்தேனோ என்று கண்ணீர் மலக கதரிய செய்தியை படித்தேன்.

## எம்பேரில்

நாமும் நல்ல செயல்கள் செய்யும் போது காலம், நேரம், களைப்பு பாராது இறைவனுக்காக செய்யும் பொது இயேசுவும் எமக்கு உற்ற நண்பனா கவும் வழிகாட்டியாகவும் இருப்பதை காணமுடியும்.

## செபம்

மக்களினங்கள் அனைத்திற்கும் மேலான ஆண்டவரே! ஏழைகளான எம்மை அதிலிருந்து தூக்கி எடுத்து குப்பை மேட்டிலிருந்து உயர்த்தும் ஆண்டவரே உமக்கே ஸ்தோத்திரம் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 15 ஞாயிறு
தி.து.ப.2:14,36-41
புயோவான் 10:1-10
தி.பா.23:1-6 1பேதுரு 2:20-25

கிறிஸ்து ஆண்டவரது உயிர்த்தெழுதலின் நான்காவது வாரம் ஆரம்பமாகின்ற இந்த ஞாயிறு தினத்தன்று சபைத் தாயானவள் முன் வைக்கின்ற பரிசுத்த வெளிப்பாடுகளை தூயஆவியானவரது வல்லமையினால் காண்பதற்கான ஒளியை வேண்டி ஒரு கணம் செபிப்போம்.

இயேசு ஆண்டவர் அளித்த வாக்குறுதிக்கமைய பரிசுத்த ஆவியானவரது திரு வருகைக்காக வேண்டி ஆயத்தமாகின்ற காலப் பகுதியாகும் இது வெறும் விழாவாக மாத்திரம் அமைந்துவிடக் கூடாது கிறிஸ்தவத்தின் ஆசானாகிய அவரைப் பெற்றுக் கொள்ளுகின்ற அளவிற்கு கிறிஸ்துநாதரை எம்மால் அனுபவிப் பதற்கு முடியுமாகும் கிறிஸ்தவ வாழ்வின் திறவு கோலாவார். ஆவியானவரை அனுபவிக்காத கிறிஸ்தவர்கள் இருக்க முடியுமா?

## முதலாவது வெளிபாட்டிலிருந்து

அப்போது பேதுரு பதினொரு வருடன் சேர்ந்து எழுந்து நின்று உரத்த குரலில் அவர்களிடம் பின்வருமாறு கூறினார். 'யூத மக்களே எருசலேமில் வாழும் மக்களே இதைத் தெரிந்துக் கொள்ளுங்கள் எனது சொற்களை கவனித்து கேளுங்கள் நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவர் மெசியாவுமாக் கினார் என்பதை இஸ்ராயேல் மக்களாகிய நீங்கள் அனைவருமே உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

அவர் இதைக் கேட்டு உள்ளம் குத்தப்பட்டவர்களாய் பேதுருவையும் மற்றத் திருத்தூதர்களையும் பார்த்து "நீங்கள் மனம் மாறுங்கள் உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாக பெறுவீர்கள். ஏனென்றால் இந்த வாக்குறுதி யானது உங்களுக்கும் ,.... பிள்ளைகளுக்கும்,... யாவருக்கும்... ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது" என்றார்.

## பரி.நற்செய்தியிலிருந்து

'நான் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆட்டுக்கொட்டிலில் வாயில் வழியாக நுழையாமல், வேறு வழியாக ஏறிக் குதிப்போர் திருடர் அல்லது கொள்ளையராய் இருப்பர் வாயில் வழியாக நுழைபவர் ஆடுகளின் ஆயர் அவருக்கே காவலர் வாயிலைத் திறந்து விடுவார் ஆடுகளும் அவரது குரலுக்கே செவிசாய்க்கும்.... நானே வாயில் என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர் வெளியே வருவர் மேய்ச்சல் நிலத்தை கண்டு கொள்வர்..... நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்.

## இரண்டாவது வெளிபாட்டிலிருந்து

.... சிலுவையின் மீது (இயேசு) தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார் நம் பாவங்களுக்கு இறந்து நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். அவர் தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள் நீங்கள் வழிதவறி நுழையும் ஆடுகளைப் போல இருந்தீர்கள் ஆனால், இப்பொழுது உங்கள் ஆன்மாக களின் ஆயரும் கண் காணிப் பாளருமாய் இருப்பவரிடம் திரும்பி வந்திருக்கிறீர்கள்.

## ஒளியில் விழிப்புறுதல்

*இன்றைய வெளிப்பாடுகள் வழியாக இரு வார்த்தைகள் எம் முன்னிலையில் வைக்கப் படுகின்றன கிறிஸ்து ஆண்டவர் எமது ஆயர் அவர் அவரது ஆடுகளது குரலை அறிவார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது அவரை விசுவசித்து அவர் பின் செல்வோருக்கு தூய ஆவியானவரைப் பரிசாக அளிப்பார் என்பனவாகும். "நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாக பெறும் பொருட்டு வந்துள்ளேன்." என்று ஆண்டவர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியவாறு இன்றைய முதலாவது வெளிப்பாடானது இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு பெற்றுக் கொள்வோர் தூய ஆவியானவரை கொடையாக பெறுவார்கள் என்று உறுதிப்படுத்திக் கூறுகின்றது.

### *"உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன் ஆடுகளுக்கு வாயில் நானே"*

இன்றைய நற்செய்தி வழியாக முன்வைக்கப்படுகின்ற இந்த உறுதிப்பாடானது மிகவும் முக்கியமானதாகும் ஒரு கணம் இரு கண்களை மூடியவாறு பல தடவைகள் இவ்வுறுதி பாட்டினை தியானத்தோடு கூறியவாறு எம் உள்ளரங்கத்தை ஸ்பரிப்பதற்கு இடமளிப்போம் இயேசு ஆண்டவரே எம் முன்னிலையில் நின்றவாறு 'ஆடுகளுக்கு வாயில் நானே' எனக் கூறுகிறார். வாயில் என்பது கட்டிடமொன்றை ஏனைய பகுதிகளோடு இணைப்ப தொன்றாகும். 'வழியும், உண்மையும், வாழ்வும் நானே' ஆண்டவர் மொழிந்த வார்த்தைகள் என் நினைவிற்கு வருகின்றன. அவர் வழியாக நுழைபவர் உள்ளேயும் வெளியேயும் சென்று உணவைப் பெறுவர். மீட்புப் பெறுவர். இது வாழ்வளிக்கின்ற உணவாகும். எம் வழியாக்கிக் கொள்ளும் போது, ஆன்மீக உணவிற்கு பற்றாக்குறை ஏற்படாது. அவரே எமது புதையல், அவரே எமது ஆயராவார். அவர் எமது ஆன்மீக உணவாவதோடு அதனைப் பெற்றுத் தருகின்ற வழிகாட்டியுமாவர். அத்தியாவசியமானதையும், அனாவசியமானதையும், நாம் எதைச் செய்ய வேண்டும்? எதைச் செய்யக் கூடாது? என்பதையும் நன்கறிந்தவர் அவராவார். அவரது வழியில் எமமை எடுத்துச் செல்வதற்கு அவருக்கு இடமளிப் போமாக!

இரண்டாவது வெளிப்பாடு வழியாக கிறிஸ்துநாதரைப் பின் செல்வதற்காக வேண்டி எமக்குள்ள அழைப்பினைப் பற்றி புனித பேதுரு நினைவு கூறுகிறார். " மறாக நன்மை செய்தும் அதற்காகப் பொறுமையோடு துன்புற்றால் அது கடவுளுக்கு உகந்த தாகும். கிறிஸ்துவும் உங்களுக்காக துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே, நீங்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள்: இதற்காகவே அழைக்க ப்பட்டுள்ளீர்கள்"

உண்மையான ஆயனான இயேசு ஆண்டவர் எனக்காக:எமக்காக வேண்டி தம் உயிரையே பலியாகக் கொடுத்தார் அந்த அன்பு மிகு செயல் காரணமாக எமக்க புத்துயிர் அளிக்கின்றவரான ஆவியானவரை அனுப்புவதில் தந்தையானவர் பேரு வகை கொண்டார். அந்த மாபெரும் பரிசு வழியாகவே தந்தையானவரும் வெளிப் படாக்கப்பட்டுள்ளார். ஆனபடியால் மாபெரும் விருந்தின் உணவு போன்ற தியாகத்தின் கிறிஸ்தவ வாழ்வு வாழக் கிடைத்தமைக்காக இறைவனை புகழ்ந்து பாடுவோம் புனித பேதுரு இவ்வாறு கூறுகிறார். "நீங்கள் வழி தவறி அலையும் ஆடுகளைப் போல இருந்தீர்கள் ஆனால் இப்பொழுது உங்கள் ஆன்மாக்களின் ஆயரும் கண்காணிப்பாளருமாய் இருப்பவரிடம் திரும்பி வந்திருக்கிறீர்கள்" ஆம் அதுதான் உண்மை ஆண்டவரே உமக்கே புகழ்.

அப்பா தந்தாய்! உமது திரு மகனும் எமது ஆயருமாகிய இயேசு ஆண்டவர் எமக்கு உதயமாகின்ற தந்த மீட்புக்காக வேண்டி உமக்கு நன்றி நவிலுகின்றோம் அதிகமதிகமாக எம் துணையாளரான ஆவியானவரைப் பெற்றுக் கொள்வதற்கான தீயை எம்முள் அடிக்கடி பற்றியெரியச் செய்தருளும். உமது அரசுக்காக வேண்டி அர்ப்பணமாவதற்காக வேண்டி எம்மைத் திடப்படுத்தியருளும்.

*"நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"*
(தி.பா.23:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 16 திங்கள் பு.யோவான் 10:11-18
தி.து.ப.11:1-18 தி.பா.42:1-2,43:3-4

## பரி.நற்செய்தியிலிருந்து

நல்ல ஆயன் நானே நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார். கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப்போவார். ஏனெனில் அவர் ஆயனும் அல்ல ஆடுகள் அவருக்கு சொந்தமும் அல்ல ஓநாய் ஆடுகளைப் பற்றி இழுத்துக் கொண்டு போய் மந்தையைச் சிதறடிக்கும் கூலிக்கு மேய்ப்பவருக்கு ஆடுகளைப்பற்றி கவலை இல்லை நல்ல ஆயன் நானே தந்தை என்னை அறிந்திருக்கிறார். நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன். இக் கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவிசாய்க்கும்.

## ஒளியில் விழிப்புறுதல்

ஆவியானவரே! இறைவார்த்தைக்கு உள்ளாவதற்காக வார்த்தையானவரின் வரங்களைத் தந்தருளும் "ஆடுகளுக்கு வாயில் நானே" கிறிஸ்துவின் மனநிலையை காண்கையில் தந்தை தன்னை அன்பாக அறிந்திருப்பது போல தன்னிடம் ஒப்படைத்தவர்களையும் தான் நேரிய வழியில் நடத்திச் செல்வேன் என்று தந்தையின் விருப்பத்திற்கேற்ப சிதறிய மனிதர்களை தன் தண்டினாலும் கோலினாலும் தேற்றி அவரிடம் ஒப்படைப்பேன். அதற்காக வேண்டி தன்உயிரையும் கொடுப்பேன் என்று தன் அன்பை வெளிப்படுத்துவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது திருத்தூதர் பணியில் பிற இனத்தவர்களும் கடவுளின் வார்த்தையை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று திருத்தூதர்கள் அறிந்தார்கள். நல்ல ஆயனைப் பின்பற்றியவர்களுக்கு இவ் வார்த்தை ஊட்டம் பெற்றதாய் அமையும்

## எம் பேரில்

நாம் அவரின் மேய்ச்சலின் ஆடுகளாய் தெரிந்து கொள்ளப் பட்டுள்ளோம் தூய ஆவியானவருக்குள் விழிப்புறும் பொழுது அவரது ஒலிக்கு செவிசாய்ப் போமேயானால் திருச்சபையின் ஆயர்களாக குருக்கள், துறவிகளுக்கு மாத்திரமில்லாமல் எங்களையும் அவர் பணிபுரிவதற்கு அழைத்துள்ளார் அவருடைய உண்மையும் ஒளியும் வழிநடத்தலுக்கும் அமையபாகுபாடின்றி நாமும் நடந்து தவறிய மனிதரை ஆண்டவர் பால் ஈர்த்து நேரிய வழியில் நடப்போம். காணாமற் போன ஆடுகளாகிய எங்களை அன்போடு அணைப்பார் கலைமான் நீரோடைக்காக ஏங்கித் தவித்தது போல் கடவுளேயூ என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 17 செவ்வாய்**
**தி.து.ப.11:19-26** **பு.யோவான் 10:22-30**
**தி.பா.87:1-7**

## பரி.நற்செய்தியிலிருந்து

எருசலேமில் கோவில் அர்ப்பணிப்பு விழா நடந்து கொண்டிருந்தது. அப்போது குளிர்காலம் கோவிலின் சாலமோன் மண்டபத்தில் இயேசு நடந்து கொண்டிருந்தார் யூதர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு "இன்னும் எவ்வளவு காலம் நாங்கள் காத்திருக்க வேண்டும்? நீர் மெசியாவானால் அதை எங்களிடம் வெளிப்படையாக சொல்லிவிடும்" என்று கேட்டார்கள் இயேசு மறுமொழியாக,"நான் உங்களிடம் சொன்னேன்: நீங்கள் தான் நம்பவில்லை, என் தந்தையின் பெயரால் நான் செய்யும் செயல்களே எனக்கு சான்றாக அமைகின்றன..... அவற்றை எனக்கு அளித்த என் தந்தை அனைவரையும்விடப் பெரியவர், அவற்றை என் தந்தையின் கையிலிருந்து யாரும் பறித்துக் கொள்ள இயலாது. நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கின்றோம்" என்றார்.

## ஒளியில் விழிப்புறுதல்

உள்ளங்களை ஊடுருவிக்காணும் தூய ஆவியானவரே! இயேசு கிறிஸ்து ஆண்டவரின் உள்ளதினைக்காண எனக்கு உதவியருளும். ஜெருசலேம் கோவில் அர்பண விழாவில் கலந்துக் கொண்ட இறை மகன் இயேசு சாலமோன் மண்டபத்தில் அப்பா தந்தையுடன் நடந்து கொண்டே ஆழமாகத் தொடர்பு கொண்டார். அவ்வேளையில் இறைதந்தை அனைத்தையும் கற்றுக்கொடுக்கின்றார். எனவே யூதர்கள் அவரிடம் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் இறை தந்தை சொல்லித்தந்தபடி பதில் அளிக்கின்றார். தன்னைச் சூழ்ந்து கொண்டு கேள்வி கேட்கும் யுதர்களின் கபடம் நிறைந்த உள்ளத்தினைக் காணும் ஆண்டவர்" நீங்கள் என் மந்தையைச் சேர்ந்தவர்கள் அல்ல" என்று வெளிபடையாகக் கூறுகின்றார். என்னை விசுவாசிக்கும் மக்களுக்கு நிலை வாழ்வை அளிக்கின்றோம் என்று உறுதியாகக்கூறுகின்றார். என்னோடு இணைந்திருக்கும் மக்களை இறை தந்தை எனக்குத் தந்திருக்கிறபடியால் அவர்களை எவரும் பறித்துக்கொள்ள முடியாது என ஆணித்தரமாக இயம்புகின்றார்

## எம்பேரில்

பரிசுத்த ஆவியினால் நிரப்பி இருந்த இயேசுக்கிறிஸது நாதர் தன்னிடம் கேள்வி கேட்ட யூதார்களுக்கு தக்க பதில் அளிக்கின்றார். கிறிஸ்தவ மறுமலர்ச்சி மக்களாகிய நாம் பல கோணங்களில் எம்மிடம் கேள்வி கேட்கும் மக்களிடம் எவ்வாறு பதில் அளிக்கினறோம்? அவர்கள் கேட்கும் கேள்விகளைப் புரிந்து கொள்ளும் நிலையில் நாம் இருக்கின்றோமா? தூய ஆவியானவருக்கு விழிப்புற்றவாறு தக்க விதத்தில் கதைப்பதற்கு வரம் தருமாறு வேண்டிநிற்போம்.

## செபம்

இறை தந்தையே! அனுதினமும் உம்மோடு உறவாடி உமது வல்லமையைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்தருளும். நீர் சொல்லு கிறபடி நாங்கள் கதைப்பதற்கு எம்மை வழிநடத்தியருளும்.

**'கடவுளின் நகரே! உன்னைப் பற்றி மேன்மையானவை பேசப் படுகின்றன.'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 18 புதன்**

**தி.து.ப.12:24,13-15**

**தி.பா.67:1-2,4,5,7**

**பு.யோவான் 12:44-50**

## பரி.நற்செய்தியிலிருந்து

**இயேசு உரக்கக் கூறிச் சொன்னதாவது "என் மேல் விசுவாசம் கொள்கிறவன் என் மேல் அன்று என்னை அனுப்பியவர் மேல் தான் விசுவாசம் கொள்கிறான் என்னை காண்கிறவனோ என்னை அனுப்பியவரையே காண்கிறான்....... நான் சொல்வதை ஒருவன் கேட்டபின் அதன்படி நடவாவிட்டால் அவனுக்கு தீர்ப்பிடுவது நானல் லேன் ஏனெனில் என்னை புறக்கணித்து நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளாதவனுக்குத் தீர்ப்பிடும்.......அவருடைய கட்டளையோ முடிவி ல்லா வாழ்வு என்பது எனக்கு தெரியும் எனவே நான் சொல்வ தெல்லாம் என் தந்தை எனக்கு கூறியவாறே சொல்லுகிறேன்.**

## ஒளியில் விழிப்புறுதல்

ஒளியின் இறைவா! தூய ஆவியானவரே! இவ்வேளை எம்மை முழுமையாக ஆட்கொள்ளும் விலை மதிக்கமுடியாத நற்செய்தி வாசகங்களை எனகத்தே உறைய வைப்பதற்கு உமது அருளை தாருமையா மேற்படி கூறப்பட்ட நற்செய்தி வெளிப்பாடுகள் இறை இயேசு அப்பா தந்தைக்குள் எவ்விதமாக ஐக்கியமாகியிருந்தார் என்பதைத் தெட்டத்தெளிவாக காட்டியப்படியே இருந்தன உலக ஆசைகளிலே மூல்கி பணம்,பதவி ஆசைகளிலே வெந்து பழிவாங்கும் குணம் பொறாமை, குரோதம் போன்ற தீய எண்ணங்களிலே சுழன்று இருளாகி கிடந்த உலகிற்கு நிலையான ஒளியாக கிறிஸ்து இயேசு வருகை தந்தார். அந்த ஒளியினுள் அனைத்து மக்களும் இறை அரசினை இறை தந்தையை கண்டு அறிய வேண்டும். அவரது அன்பான தன்மையை புரிந்து கொள்ள வேண்டும் என்பது அவரது பேராவலாக இருந்தது. முடிவில்லா வாழ்விற்கு வழி வகுக்கும் அப்பா தந்தையின் வார்த்தைகள் என்பதில் தளராத நம்பிக்கை கொண்டிருந்தால், அனைத்தையும் மக்களுக்கு அறிவித்துப் போதித்து வந்தார் எனவெதான் அவரது கட்டளையோ முடிவில்லா வாழ்வு எனக்கு தெரியும் என்று கூறினார் "நான் உலகிற்குத் தீர்ப்பிடவதற்காக அல்ல மீட்பதற்காகவே வந்தேன்" எனும் வார்த்தைகள் அவரது எதிரிகளை அவர் மன்னித்து அன்பு செய்தார் என்பதையும் அப்பாதந்தை மீது அவர் கொண்டிருந்த அளவு கடந்த பாசமே அவரை அவ்வாறு செய்யத் தூண்டியது என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

## எம்பேரில்

பேறுபெற்ற தாயாரின் வயிற்றிலே மனுவுருவெடுத்த இறைவார்த்தை ஆவியினால் நிரப்பப்பட்டு முப்பது வருடகாலமாக பெற்றோரினதும், அயலவரினதும் நல்லெண்ணத்தை சுவிகரித்த வண்ணம் உடல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் முயற்சி பெற்ற ஸ்நாபக அருளப்பரின் கையினால் திருமுழுக்கு பெற்ற பின் அப்பா தந்தை தன்னை உலகிற்கு அனுப்பியதன் நோக்கத்தை தூய ஆவியின் வல்லமையால் அறிந்து கொள்கின்றார் அக்கணம் முதல் சிலுவையில் இறுதி மூச்சு வரை மனித குலத்திற்காகவே தமது ஒவ்வொரு அசைவையும் கையளித்தார் குழந்தைகளையும் துன்புறுவோரையும் அணைத்து அன்பு செய்த அக்கரங்களுக்கு நம் பாவங்கள் அளித்த பரிசு கரங்களை துளைக்கும் ஆணி அல்லவா? பிணியாளர்களை குணமாக்கவும் சிதரியவர்களை ஒன்று சேர்க்கவும் காடுமேடு என்று அலைந்து திரிந்த அத்திரு பாதங்களுக்குக் நான் கொடுத்த பரிசு என்ன? தனது அன்புப் பார்வையால் புன்முறுவலால் விலைமதிக்க முடியாத அரும் போதனைகளால் தடுமாறும் மனித குலத்தை மாற்றியமைக்க துன்புற்ற அவரது திருமுகத்தை இரத்தக் கறையால் மாசுபடுத்திய முள்முடி எனது பாவக் கோர்வை அல்லவா? இறுதியாக எஞ்சியிருந்த ஒரு துளி இரத்தத்தையும் தண்ணீரையும் கூட உறிஞ்சி குடித்த என் பாவ நாட்டங்களை இன்னும் நான் அன்பு செய்வேனாயின் இரத்த வெறி பிடித்த வேங்கையை விட கொடியவன் நானில்லையா? சிந்திப்போம் நம்மைப்பற்றி கைவிடுவோம் எமது நன்றிகெட்டதன்மையை பாவ இருளையகற்ற வந்த ஒளி நம்மை அழைக்கிறது பொய்மையை அகற்றி உண்மையை உயிரை அளிக்க வந்த ஜீவனும் சத்தியமுமானவர் நம்மை அழைக்கின்றார் அவர் காட்டும் பாதையின் வழி நடந்து முடிவில்லா வாழ்வடைய வரம் கேட்போம்.

## செபம்

அன்பின் இறைவா! உமது திருமகன் இயேசு உமது திருக் கட்டளைக்கமைந்து உமக்குள் மாத்திரமே உமது விருப்பத்தினை நிறைவேற்றியது போல் நாமும் எமது ஆசாபாசங்களை வெறுத்து நீர் எதிர்பார்க்கும் மக்களாக வாழுவதற்கு தேவையான வல்லமையை உமது திருமகன் இயேசு வழியாக எமக்குத் தந்தருளும். ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 19 வியாழன்**
**தி.து.ப.13:13-25 — பு.யோவான் 13:16-20**
**தி.பா.89:1-2,20-21,24,26**

## பரி.நற்செய்தியிலிருந்து

பணியாளர் தலைவரை விடப் பெரியவர் அல்ல. தூது அனுப்பப்பட்டவரும், அவரை அனுப்பியவரை விடப் பெரியவர் அல்ல என உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன். இவற்றை நீங்கள் அறிந்து அதன் படி நடப்பீர்கள் என்றால் நீங்கள் பேறுபெற்றவர்கள்... நான் தேர்ந்து கொண்டவர்கள் யாரென எனக்குத் தெரியும்.... மறை நூல் வாக்கு நிறைவேறியாக வேண்டும் .... நான் அனுப்புகிறவரை ஏற்றுக் கொள்பவர் என்னையே ஏற்றுக் கொள்கிறார். என்னை ஏற்றுக் கொள்பவர் என்னை அனுப்புகிறவரை ஏற்றுக்கொள் கிறார் என உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்.

## ஒளியில் விழிப்புறுதல்

தாம் வந்த இடத்திற்கு மீண்டும் செல்ல வேண்டியதன் நேரம் வந்து விட்டது என்பதை உணர்ந்தவராக இயேசு ஆண்டவர், சீடர்களின் பாதங்களை கழுவியவாறு அதாவது தலைவர்கள் பணியாளராக வேண்டும். அனுப்பிய தந்தையின் அன்பு அத்தகையானதாகும் என்பதைத் தமது சீடர்களுக்கு உணர்த்தியதன் பின்னர் தான் சீடர்களுக்கு மேற்படி வார்த்தை களைக் கூறுகின்றார்.

தமது செயற்பாடுகள் அனைத்தும் உலகம் ஏற்றுக் கொள்ளுதலுக்கு மாறானதாகும் தந்தையின் அரசின் செயற்பாடுகள் உலக ஆளுமையின் செயற்பாடுகளுக்கு எதிர்மாறான வையாகும் தந்தையின் அன்பினை ஏற்றுக் கொள்ளாத உலகம் தன்னைப் புறக்கணித்து போல உங்களையும் புறக்கணிக்கும் அதன் பிரதிபயன்களை துன்ப, துயரம், வேதனை, பிழையாக விளங்கிக் கொள்ளுதல், பிழையான தீர்ப்பிடுதலுக்கு உள்ளாகுதல், புறக் கணிப்பு, மரணம் என்பன இறையரசின் ஊழியர்களது உரிமைகளாகும் அவற்றை அனுபவிக்க நேரிடும் என்பதைத் தமது சீடர்களுக்கு உணர்த்துகின்றார் போலும்.

அத்தோடு தந்தையின் விருப்பத்திற்கமைய தேர்ந்துக் கொள்ளப் பட்டவர் எவரான போதிலும் அவருக்கு பிரமாணிக்கமுள்ளவராக, கீழ்ப்படிவுள்ளவராக வேண்டும். பதிலாக அவரது தகமை, பெலயீனம், சாதி, குலம் போன்றவற்றைக் கருத்திற் கொள்ளலாகாது என்பதையும் ஆவியானவருள் உணர்த்துகிறார் போலும்.

"நான் அனுப்புகிறவரை ஏற்றுக் கொள்கிறவர் என்னையே ஏற்றுக் கொள்கிறார். என்னை ஏற்றுக் கொள்பவர் என்னை அனுப்பியவரை ஏற்றுக் கொள்கிறார்."

## செபம்

தூய ஆவியானவரே! அப்பா தந்தையானவரது திருவுளத்திற்கமைய அவரது திருமகனை எனது வாழ்வின் ஒரே ஆண்டவராக்கிக்கொண்டு ஆரம்ப சங்கத்தினரைப் போல சங்கம வாழ்வுக்கு அழைப்பு தந்தமைக்காக நன்றி கூறி புகழ்பாடுகிறேன். எனது வாழ்க்கை நிகழ்ச்சிகளின் போது உலக பெறுமதிகளுக்கு முதலிடம் கொடாது உலகோரின் கௌரவத்தை நாடாது தந்தையின் திருவுளத்திற்கமைந்து செயற்படுவதற்கான வல்லமையைத் தந்தருளும்.

அத்தோடு எனது புகழ்ச்சிக் கிராமத்தில், சீடத்துவ சங்கத்தின், சங்கமத்தின், சிறுமந்தைகயின் பொறுப்பாளர்கள் எவரான போதிலும் அவர்களை இறைதகப்பனே தேர்ந்தெ டுத்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு பிரமாணிக்கமுள்ளவனாக கீழ்படிவுள்ளவனாக வாழுவதற்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களை இறைதகப்பனே தேர்ந்தெடுத்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொண்டு, வாழுவ தற்கும், எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களைக் கௌரவித்து, மதிப்பத ற்கான உள்ளரங்க நிலையை என்னுள் ஏற்படுத்தியருளும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 20 வெள்ளி
தி.து.ப.13:26-33
தி.பா.2:6-11
பு.யோவான் 14:1-6

## பரி.நற்செய்தியிலிருந்து

மீண்டும் இயேசு நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. அப்படி இல்லையெனில் 'உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப்போகிறேன்' என்று சொல்லியிருப்பேனா? நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள் நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும்.' என்றார் தோமா அவரிடம் "ஆண்டவரே நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்?" என்றார் இயேசு அவரிடம் "வழியும் உண்மையும் வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை."

## ஒளியில் விழிப்புறுதல்

தூயவராம் ஆவியானவரே! இந்த வெளிப்பாட்டின் ஊடாக இறைமகன் இயேசுவின் உள்ளாந் தரத்தைக் காண முழுமையாக உம் ஞான ஒளியினால் ஒளி மயமாக்கியருளும். இன்றைய நற்செய்தியானது முதலிடமாக கடவுளிலும் அடுத்ததாக இயேசுவிலும் நம்பிக்கையுடன் வாழ்வதற்காக அழைப்பு வருகிறது இயேசு ஆண்டவர் தானாக எதையுமே செய்யவில்லை மாறாக அவர் திருத்தந்தையின் விருப்பத்தையே நிறைவேற்றுகின்றார் உலக மீட்புக்காக தந்தையானவர் தன்னை தெரிவு செய்துள்ளதால் அவரில் நம்பிக்கை வைத்து வாழ அழைக்கிறார். ஏனெனில் அவரே வாழ்வும் வழியும் உண்மையு மாவார் "நான் உங்களை அழைத்துச் செல்வேன்' என்று கூறும் பொழுது நிலை வாழ்வைப் பெற்றுக் கொள்ள விசுவாசம் மிகவும் அவசியமாகின்றது. தந்தையிடம் செல்ல ஒரே வழி இயேசு மட்டுமே ஏனெனில் அவர் உண்மையும்,வாழ்வுமாக இருக்கிறார் இயேசு தரும் சக்தியிலும் நம்பிக்கையிலும் வாழ்ந்து அவர் ஏற்பாடு செய்துள்ள இடத்தில் வாழ அழைக்கின்றார்.

## எம்பேரில்

நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்: ஏனெனில் வழியும் உண்மையும் வாழ்வும் நானே என்ற இயேசுவின் வார்த்தைகளுக்கு செவிமடுக்கும் போது அவரில் விழிப்புடனும், இணைந்தும் வாழும் பொழுது அவரே எமக்குத் துணையாக இருக்கிறார் என்பதை உணரலாம் தந்தையை முழுமையாக அறிந்துள்ளவர் ஒருவரே அவரே எம்மைத் தந்தையிடம் அழைத்துச் செல்பவர் நிரந்தர வழிப்புறுதல் என்பது நாம் பெற்றுள்ள விண்ணகப் பரிசாகும் நாளாந்த வாழ்வில் முகம் கொடுக்கும் சவால்களுக்கு அவர் சக்தியே எமக்கு ஆறுதல் இறை அரசிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நாம் அப்பா தந்தையின் அரவணைப்பிற்குள்ளாகுவதற்கு தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம். பாவ வாழ்விலிருந்து பிரிந்து உண்மையான மனஸ்தாபத்துடன் கருணையும் இரக்கமும் நிறைந்த இயேசுவைக் காண்போம் உண்மையின் ஒழியின் பயணம் செல்வோம் இன்னும் எம் குடும்பங்களில், சங்கத்தில் ஆண்டவரை அறியாமல் வாழும் மக்கள் மட்டில் மனம் வருந்தி அவர்களும் நிலை வாழ்வைப் பெற்றுக் கொள்ள உதவி செய்வோம்.

## செபம்

அன்பின் தந்தாய்! உமது நியதியற்ற அன்பினால் என்னை நிரப்புகின்றமைக்காக வேண்டி உமக்கு நன்றி கூறுகின்றேன். இன்று பெலயீனங்களை இனங்கண்டு கொள்வதற்கான வரம் தாரும். இறைமகன் இயேசுவே! வாழ்வும், வழியும், உண்மையும் என்ற சத்தியத்தை தவறிப் போய் அங்கும் இங்குமாக அலைந்து திரியும் மக்களுக்கு எடுத்துரைக்கும் தூதுப்பணிக்காக என்னை அனுப்பியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 21 சனி
தி.து.ப.13:44-52
பு.யோவான் 14:7-14
தி.பா.98:1-4

## பரி.நற்செய்தியிலிருந்து

நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள் இது முதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள் அவரை கண்டுமிருக்கிறீர்கள் என்றார் அப்போது பிலிப்பு அவரிடம் "ஆண்டவரே தந்தையை எனக்கு காட்டும் அதுவே போதும்" என்றார் இயேசு அவரிடம் "இவ்வளவு காலம் நான் உங்களுடன் இருந்தும் நீ என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையை காண்பது ஆகும்..... நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையை? நான் உங்களுக்கு கூறியவற்றை நானாக கூறவில்லை என்னுள் இருந்து கொண்டு செயலாற்றுபவர் தந்தையே நான் தந்தையுள் இருக்கிறேன் தந்தை என்னுள் இருக்கிறார்....

## ஒளியில் விழிப்புறுதல்

ஆருயிர் நண்பராம் தூய ஆவியானவரே! இயேசுவின் பால் நம் கண்,மனம்,இதயத்தை ஏறெடுத்து இன்றைய நற்செய்தியின் மூலம் இறைமகனின் உள்ளரங்கத்தைக்காண எம்மை முழுமையாக மூடியவண்ணம் வழிநடத்தும் அப்பாதந்தையின் அன்பில் முழுமையாக மூழ்கி இருந்த இறைமகன் "தந்தையை எங்களுக்குக் காட்டும்" எனக் கேட்கும் பிலிப்புவின் கேள்விக்கு "இவ்வளவு காலம் நான் உங்களுடன் இருந்தும் நீ என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பதாகும். என எடுத்துக்கூறி பரமதிருத்துவத்தின் மறைரகசியத்தினை எடுத்துக்காட்ட முன்வந்தார். அவருடன் ஒன்றாக இருந்து அவரின் போதனைகளையும் புதுமைகளையும் கண்டும் அவரை அறிந்துகொள்ளாத நிலையில் இருக்கும் சீடர்களைப் பார்த்து என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டாலும் என் செயல்களின் பொருட்டாவது என்னை நம்புங்கள் என் செயல்களின் பொருட்டாவது என்னை நம்புங்கள் என மனவேதனையுடன் எடுத்துக்கூறுகிறார் நீங்கள் என் பெயரால் கேட்பதை நான் செய்வேன்இவ்வாறு அவர் வழியாக அப்பா தந்தை மாட்சி பெறுவதைக் காண்பிக்கிறார். அப்பா தந்தையின் பேரன்பு அவரினூடாகவே வெளிப்படுகின்றது என்பதை சீடர்களுக்கு எடுத்துக்காட்டுவதுடன் இயேசுவே ஒரே ஆண்டவர் என ஏற்று வாழ எமக்கும் அழைப்புவிடுக்கின்றார்.

## எம்பேரில

இறையரசின் மகனாக மகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் எமது அழைப்பிற்கு எவ்வளவு தூரம் விழிப்புறுகிறோம் எமது அன்றாட வாழ்கையில் நாம் முகம் கொடுக்கும் கஸ்டங்களிலும் நிம்மதி அற்ற நிலையிலும் இயேசு நமது ஒரே ஆண்டவர் என்ற விசுவாசத்துடன் வாழ்கின்றோமா? இயெசுவின் வழி அப்பாவை காணும் தாகம் எம்முள் இருக்கிறதா? இறை அரசிற்காக சாட்சிபகர எவ்வளவு தூரம் நாம் வழிப்புறுகின்றோம் எமது பெலவீனங்களுக்கு விழிப்புறுவோம் இயேசுவே ஒரே ஆண்டவர் என ஏற்று வேற்றினத்தாருக்கு ஒளியாக வாழ்ந்து சாட்சிபகர்வதற்கு எம்மை வழிநடத்தத் தூய ஆவியானவருக்கு இடமளிப் போம்.

## செபம்

அன்பின் ஆண்டவரே! இயேசுவே ஒரே ஆண்டவர் என முழங்கிடவும் அவரே ஒரே ஆண்டவர் என அறிக்கையிட்டு உமது இறை அரசிற்காக சாட்சி பகர்வதற்கு உமது பரிசுத்த ஆவியினால் எம்மை அபிஷேகம் செய்து வழிநடத்தும்.

**"உலகெங்கும் வாழ்வோரே அனைவரும் ஆண்டவரை ஆர்பரித்துப் பாடுங்கள் மகிழ்ச்சியுடன் ஆர்பரித்து புகழ்ந்தேத்துங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 22 ஞாயிறு
புயோவான் 14:1-12
1பேதுரு 2:4-9
தி.து.ப.6:1-7
தி.பா.33:1-2,4-5,18-19

'நீங்கள் தெர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர் அவரது உரிமைச் சொத்தான மக்கள் எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள் ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி" என்று இறை தகப்பனானவர் எம்மை ஏன் அழைத்துள்ளார் என்பதை திருச்சபை த்தாயானவள் இன்றைய நாளுக்குரிய இரண்டாவது வெளிபாட்டின் வழியாக முன்வைக்கிறார் அதே போல கிறிஸ்து நாதரைப்பற்றிய பல சத்தியங்களை பரிசுத்த நற்செய்தி வழியாகவும் முன் வைக்கிறார் இவ்வாறாக ஆண்டவர் எம்மை எடுத்து செல்லுகின்ற விந்தை மிகுந்த அன்பின் பயணத்தைப் பற்றி இன்று வெளிப்பாடாக்கப்படுகின்ற வெளிப்பாடுகளை உரிமையாக்கிக் கொள்வதற்கான வல்லமையை தூய ஆவியானவரிடம் வேண்டுவோம்.

## முதலாவது வெளிபாட்டிலிருந்து

...பன்னிருவரும் திருத்தூதரும் சீடர்களை ஒருங்கே வரவழைத்து "நாங்கள் கடவுளதுவார்த்தையைக் கற்பிப்பதை விட்டு விட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது முறையல்ல ஆதலால் அன்பர்களே உங்களிடமிருந்து நற்சான்று பெற்றவர்களும் தூய ஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரைக் கவனமாய்த் தெரிந்தெடுங்கள் அவர்களை நாம் இப்பணியில் நியமிப்போம் நாங்களே இறை வேண்டலிலும் இறை வார்த்தைப் பணியிலும் உறுதியாய் நிலைத் திருப்போம் என்று கூறினார்.... அதன்படியே அவர்கள் நம்பிக்கை -யும் தூய ஆவியில் நிறைந்த ஸ்தோவான், பிலிப்பு.... என்பவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களைத் திருத்தூதர் முன்னால் நிறுத்தினார்கள். திருத்தூதர் தங்கள் கைகளை அவர்கள் மீது வைத்து இறைவனிடம் வேண்டினர்.....

## ஒளியில் விழிப்புறுதல்

ஆரம்ப கிறிஸ்தவ சங்கத்தில் சீடர்கள் அதிகரித்த விதமும் மக்களுக்கு பணிபுரியும் போது இறை வார்த்தையைப் பொதிப்பதற்குப் பதிலாக பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது தவறான படியால் அதன் பொறுப்பளராக தூய ஆவி அருளும் வல்லமையும், ஞானமும் நிறைந்தவர்களைத் தெரிந்தெடுத்தல் பற்றி இன்றைய முதலாவது வெளிப்பாடு கூறுகிறது அத்தோடு யூத மதத் தலைவர்கள் சிலரும் இச் சங்கத்துடன் இணைவதைக் காண்பதற்கு முடியுமாகிறது.

கிறிஸ்தவ சீடத்துவத்தின் அடிப்படை அழைப்புப் பற்றி இந்த வெளிப்பாடு வழியாக நாம் விழிப்புறுத்தப் பெறுகிறோம் அதாவது இறை வேண்டலிலும், இறைவார்த்தை ப்பணியிலும் உறுதியாய் நிலைத்திருப்ப தாகும். இந்த தூதுரைப் பணிக்கு முதலிடம் கொடாது பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது முறையல்ல என்று வலியுறுத்திக் கூறப்படுகின்றது. அத்தோடு, பொறுப்பாளர்களை தேர்ந்தெடுத்தல் பற்றியும் நாம் விழிப்புறுத்தப்படுகின்றோம். இந்த விடயங்கள் இன்றைய எமது சங்கங்களுக்கு தூதுரைப் பணியை ஒதுக்கிவைத்துவிட்டு வேறு செயல்களில் நான், நாம், சங்கம் ஈடுபட்டுள்ளதா? ஈடுபட்டுள்ளோமா? முதலில் இறை தகப்பனார் எம்மிடம் எதிர்பார்க்கின்ற குறிக்கோளினை நோக்கி எம்மை எடுத்துச்செல்லுமாறு ஆவியானவரிடம் இறைஞ்சுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

உயிர்ருள்ள கல்லாகிய அவரை அணுகுங்கள். மனிதரால் உதறித் தள்ளப்பட்ட தாயினும், கடவுளால்தெரிந்து கொள்ளப்பட்ட உயர்மதிப்புள்ள கல் அதுவே, நீங்களும் உயிருள்ளகற்களாயிருந்து, ஆவிக்குரிய இல்லமாகக் கட்டி எழுப்பப்படுவீர்களா! இயேசு கிறிஸ்துவின் வழியாகக் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களில் கூட்டமாகவும் இருப்பீர்களாக!

......"இதோ, சீயோனில் நான் ஒரு மூலைக்கல் நாட்டுகிறேன். அது தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர். அவரது உரிமை சொத்தான மக்கள். எனவே, உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி.

## ஒளியில் விழிப்புறுதல்

இன்றைய நாளில் புனித பேதுருவானவர் ஊடாக எம் ஆண்டவர் எமக்குப் பெரியதோர் அழைப்பினை விடுக்கிறார்." அவரிடம் வாருங்கள் வந்து ஆவிக்குரிய இல்லமொன்றைக் கட்டியெழுப்புங்கள். இயேசுவின் வழியாய்க் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளை படைக்கும் தூய குருக்களின் கூட்டமாக இருங்கள்!" கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்ட அரச, குருத்துவ, இறைவாக்கின் மக்களாக, விசுவாச பயணத்தில் ஈடுபடுகின்ற மக்களாக திகழ்ந்து, இறைவனுடைய மாட்சிமை மிகு செயல்களை வெளிப்பாடாக்குவதற்காகவே அவர் எங்களை அழைக்கின்றார். அழைக்கப் பட்ட பயணத்தினின்று நாம் பின் தங்கியுள்ளோமேயானால், அல்லது பயணத்தை நிறுத்திக் கொண்டிருப்போமேயானால், அவரது உயிருள்ள உடலாகிய சங்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக வேண்டி மனம் வருந்துதலுடன் அவரிடம் மீண்டும் பயணமாவோம் அதற்கான வல்லமையை வேண்டுவோம்.

## பரி.நற்செய்தியிலிருந்து

....நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்னிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன..... "உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப் போகிறேன்...." தோமா அவரிடம் "ஆண்டவரே நீர் எங்கே போகிறீர்? என்றே எங்களுக்கு தெரியாது அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்?'....'வழியும் உண்மையும் வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை'....

## ஒளியில் விழிப்புறுதல்

"என்னை காண்பது தந்தையைக் காண்பது ஆகும்" தந்தைக்கும் மகனுக்குமிடையிலான ஆழமான தொடர்பு பற்றி இயேசு ஆண்டவர் நேரடியாகவே கூறுகிறார் இறைமகனானவர் தந்தையின் பூரணமான விருப்பத்திற்கமையச் செயற்பட்ட விதத்தை பரிசுத்த வாரத்தில் கண்டோம். அனுபவித்தோம் அனைத்தின் முன்னிலையிலும் தந்தையையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு அன்பார்ந்தவர் ஆவியானவருக்குள் வாழ்ந்ததன், நிலைத்ததன் பிரதிபயனாகும் அது உயிருள்ளவராக எம்முள் என்றும் வாடுகின்ற இயேசுவுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு அன்றாட வாழ்வில் அவரோடு இணைந்து தந்தையின் திரு முன்னிலையில் நிற்பதற்காகவே இன்றைய நாளில் அழைக்கப்படுகின்றோம். அவ்வாறு செயற்படும் போது தான் உண்மையான கிறிஸ்தவ சீடர்களாவோம்

தந்தையின் இல்லத்திற்கான பயணத்தை இக்கனமே ஆரம்பிப்போம் ஆவியானவருடன் பயணத்தைத் தொடங்ரோம்

**ஆவியானவரே! தந்தை இல்லத்திற்கு எம்மை எடுத்தச் சென்றருளும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 23 திங்கள்**
**தி.து.ப.14:5-18 பு.யோவான் 14:21-26**
**தி.பா.115:1-4,15-16**

### பரி.நற்செய்தியிலிருந்து

என்; கட்டளைகளை ஏற்றுக் கடைபிடிப்பவர்கள். என் மீது அனபுக்கொள்வர்மீது தந்தையும் அன்புகொள்வர். நானும் அவர்மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிப்படுத்துவேன். யூதாஇஸ்காரியோத்து யூதாசு அல்ல மற்றவர் அவரிடம் ஆண்டவரே நீர் உம்மை உலகிற்க்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு வெளிப்படுத்த போவதாகச் சொல்கிறிரே ஏன்? என்று கேட்டார்.அதற்க்கு இயேசு பின்வருமாறு கூறினார். என் மீது அன்புக்கொள்பவர் நான் சொல்வதை கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர் மீது அன்புக் கொள்வார்.நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிக்கொள் வோம். என் மீது அன்புக்கொண்டி ராதவர்நான் சொல்வதைக் கடைப்பிடிப்பதில்லை

(மிகுதியை தியான நிலையில் வாசிக்கவும்)

### ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! எம்மை ஆட்க்கொள்ளும் இயேசுநாதர் யுதாவிடம் கூறுகிறார் நீ கேட்க்கும் வார்த்தைகள் என்னுடையவை அல்ல தந்தையுடையவே தூய ஆவியா னவர் அனைத்தையும் கற்றுத்த ருவார். நாம் கூறிய அனைத்தையும் நினைவுட்டுகிறார் எனக்கூறியுள்ளார் இவ்வார்த்தையின் பிரதி அன்பு பெந்தகோஸ்த்து நாளான்று பரிசுத்தா வியின் வல்லமையைத் திருத்துாதர்க ளுக்குகொடுத்ததை நினைவுக்கூற க்கூடியதாக உள்ளது. அதே வல்லமையால் யூதாவும் அவர் சீடர்களும் மக்களை அன்புக்குரிய வர்களாக்கி இயேசுவே ஆண்டவர் என்று மக்களுக்கு உரைத்து தந்தையின் அன்புக்கு பாத்திரமா னார்கள்.

### எம்பேரில்

அன்பு பொறுமையுள்ளது அன்புள்ள இடத்தில் அதிகாரம் இருக்காது நாம் அன்புடன் பழகும் போது எதையும் சாதிக்கலாம் எந்தச் செயலையும் செய்விக்கலாம் பகிர்வு வாழ்வு விட்டுக் கொடுப்பு அனைத்தினுாடாக அன்பைப் பகிர்ந்து கொள்ளலாம் என்பதை கண்டுள்ளோம். மேலும் காண்போம் அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கிறார் நாம் பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு உலகை வெல்வோமா?

### செபம்

வழுவாத படி எம்மைக் காக்கவும் தமது மாட்சித் திருமுன் மகிழ்ச்சியோடு எம்மை மாசற்றவர்களாய் சிறுத்தவும் வல்ல நம் மீட்பராகிய ஒரே கடவுளுக்கு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் மாட்சியும் மாண்பும் ஆற்றலும் ஆட்சியும் ஊழிக்காலம் தொட்டு இன்றும் என்றென்றும் உரியன ஆமென்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 24 செவ்வாய்**
**தி.து.ப.14:19-28** **பு.யோவான் 14:27-31**
**தி.பா.145:10-13,21**

## பரி.நற்செய்தியிலிருந்து

**.....நான் உங்களுக்கு தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் நான் போகிறேன் பின் உங்களிடம் திரும்பி வருவேன் என்று நான் உங்களிடம் சொன்னதைக் கேட்டீர்களே! நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால் நான் தந்தையிடம் செல்வதைப் பற்றி மகிழ்ச்சி அடைவீர்கள் ஏனெனில் தந்தை என்னை விடப் பெரியவர் இவை நிகழும் போது நீங்கள் நம்புமாறு இவை நிகழும் முன்பே சொல்லி விட்டேன்..... நான் தந்தை மீது அன்பு கொண்டுள்ளேன் அவர் எனக்குக் கட்டளையிட்டபடி செயல்படுகிறேன் என்பதையும் உலகு தெரிந்து கொள்ள வேண்டும்.**

## ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! இயேசுவின் உள்ளரங்கத்தைக் காண்பதற்குத் நிறை உண்மையான இயேசுவை எனக்குள் மனுவுருவாக்கியருளும் இன்று நாம் வாழ்க்கையில் புயல் போன்ற சோதனைகள் ஏற்படும் போது எமது விசுவாச வாழ்க்கை தழும்பும் போது இயேசுவை எம் வாழ்வின் ஆண்டவராக ஏற்றுக் கொண்ட நாமே இவ்வுலகின் தலைவனான தீயவனின் ஏமாற்று வழிகளுக்குத் திசைதிருப் பப்படுகிறோம் உலகம் தரும் சமாதானத்தை நோக்கி ஓடுகின்றோம் இப்படியாக திசைதிருப்பப்படுகின்ற எமக்கு இன்றைய நற்செய்தி ஒரு சவாலாக அமைகின்றது நான் உங்களுக்கு தரும் அமைதி போன்றது அல்ல இன்றைய நற்செய்தியூடாக இயேசு இன்னும் ஒரு உறுதியான வாக்குறுதியைத் தருகிறார் “இனி நான் உங்களோடு மிகுதியாகப் பேசப் பொவதில்லை ஏனெனில் இவ்வுலகத் தலைவன் வந்து கொணடிருக் கின்றான் அவனுக்கு என் மேல் அதிகாரம் இல்லை” ஏனென்றால் இயேசு உயிர்த்தெழும் போது தலைமை ஏற்றோர் அதிகாரம் தாங்குவோர் வான் வெளியில் சுற்றித்திரியும் தீய ஆவிகள் அனைவருடையும் படைக்கலன்களைப் பறித்துக் கொண்டே உயிர் பெற்றார் எனவே, மனித பிரச்சினைக்கு உண்மையான அமைதி கிடைப்பது உயிர்த்த இயேசுவிடம் மட்டுமே.

## எம் பேரில்

நாம் பல சோதனைகள், வேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும் ஆகவே நாம் நம்பிக்கையில் நிலைத்திருப்போமாக? ஏனென்றால் தீயவன் இறையாட்சிக்கு உட்பட்ட மக்களைத் தான் தீண்ட வகை தேடுவான் நாம் விழிப்புறுவோம் தீயவனை எதிர்க்கக் கூடிய படைப்புக்களான இறைவார்த்தைகளைக் கையிலேந்தியவர்களாக தீயவனின் தீய கணைகளை வெல்வோம் சாத்தான் தனிப்பட்ட ஒரு உருவத்தில் எம்மை சோதிக்க வரமாட்டான் எக்கணமும் விழிப்புறுவோம் உலக சமாதானத்தை நாடாமல் இயேசு தரும் சமாதானத்தை நாடி உலகை வெற்றி கொள்வோம்.

## செபம்

ஆண்டவர் தாம் செய்யும் அனைத்திலும் நீதி உடையவர் அவர் தம் செயல்கள் யாவும் இரக்கச் செயல்கள் தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கின்றார் என் வாய் ஆண்டவரின் புகழை அறிவிப்பதாக! உடல் கொண்ட அனைத்தும் அவரது திருப் பெயரை என்றும் எப்பொழுதும் போற்றுவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 25 புதன்கிழமை**
**தி.து.ப.15:1-6** **பு.யோவான் 15:1-8**
**தி.பா.122:1-2,4-5**

## பரி.நற்செய்தியிலிருந்து

**உண்மையான திராட்சை செடி நானே என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர் என்னிடமுள்ள கனி கொடாத கொடிகள் அனைத்தையும் அவர் தறித்து விடுவார் கனிதரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு கழித்து விடுவார் நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கனவே தூய்மையாய் இருக்கிறீர்கள் நான் உங்களோடு இணைந்து இருப்பது போல் நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். கொடி திராட்சை செடியோடு இருந்தால ன்றித் தானாகக் கனி தர இயலாது அது போல நீங்களும் என்னோடு இருந்தாலன்றிக் கனி தர இயலாது. சானே திராட்சை செடி நீங்கள் அதன் கொடிகள்.......**

(மிகுதியை தியான நிலையில் வாசிக்கவும்)

## ஒளியில் விழிப்புறுதல்

'நானே திராட்சைக் கொடி நீங்கள் அதன் கிளைகள்' ஆண்டவர் இயேசுவே திராட்சை செடியாகவும் நாமே அவரில் இணைந்திருக்கு கொடியாகவும் இன்றைய நற்செய்தியில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. கொடியானது செடியில் படர்ந்து வளர்ந்தால்தான் அதற்க்கு நல்லமுறையில் பலன் தரமுடியும். அது செடியை விட்டு வலகினால் அதனால் நல்ல முறையில் வளர முடியாமல் போவதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். ஒன்றுக்கும் பயன்படாமல் இறுதியில் நெருப்பிலேயே எறிக்கப்படுகின்றது. அது போன்று தான் மனிதவாழ்வு என்பதனை இன்றைய நற்செய்தி வழியாக இயேசு ஆண்டவர் எமக்கு எடுத்துக் கூறுகிறார்.

## எம்பேரில்

எமது நிலைப்பாடு என்ன? இயேசு ஆண்டவரில் இணைந்தபயணத்தை நாம் மேற்க 'கொண்டுள்ளோம்.'நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைததிருந்தால் நீங்கள் விரும்பிக்கேட்பதெல்லாம் நடக்கும், நீங்கள் மிகுந்த கனி தந்து எனசீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சியளிக்கிறது "எனும் இயேசுவின் வார்த்தையை உணர்ந்து அவரோடு இணைந்த பயணத்தில் அவருடைய வார்த்தையின் படி வாழ்ந்து தந்தைக்கு மாட்சியளித்து அவருக்குகந்த பிள்ளை களாக வாழ முனைவோம். எமது வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒளியாக அமைய தூய ஆவியானவரின் துணையை நாடுவோம். உமது விருப்பத்தை தவிர வேறெதுவும் எனக்கு இல்லை என்ற வார்த்தையை எமது உணவாக்கிக்கொள்வோம்.

## செபம்

அன்புத் தந்தாய்! உலக மாயைகள் சில வேளைகள் இறை இயேசுவோடு இணைந்த பயணத்திற்க்குத் தடையாக இருக்கிறது. அதனால் சில வேலைகளில் நாம் உலர்ந்து சருகாகி போக நெரிடுகிறது. தந்தாய் அவ்வாறான சோதனைகளில் நாம் சிக்காதவாறு உமது கரம் பற்றி நடக்க எம்மை எவ்வேளை யிலும் உமது வல்லமைமிக்க ஆவியினால் நிரப்பி வழி நடத்தியருளும்.

**"ஆண்டவரது இல்லத்திறிக்கு போவோம்" என்ற அழைப்பை கேட்டபொழுது நான் அகமகிழ்ந்தேன்.**

தி.பா:122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 26 வியாழன்**
**தி.து.ப.15:7-21** **பு.யோவான் 15:9-11**
**தி.பா.96:1-3,10**

## பரி.நற்செய்தியிலிருந்து

**என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன் அன்பில் நிலைத்திருங்கள் நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளை கடைப் பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள், என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்.**

## ஒளியில் விழிப்புறுதல்

மனிதன் மகிழ்வாக இருக்க வேண்டும் என்பதற்காக படைப்புக்கள் அனைத்தையும் ஆண்டு நடத்தும் முழு அதிகாரத்தையும் இறைவன் கொடுத்தார் ஆனால் இறையன்பை உணராது மனிதன் துன்பத்தை பெற்றுக் கொண்டான். அம்மனிதன் மீது கொண்ட அன்பை இறைவனால் மாற்ற முடியவில்லை அம்மனிதனது மகிழ்வுக்காகவே கிறிஸ்துவை அனுப்புகின்றார். தந்தையின் அன்பினால் மகிழ்வை அனுபவித்த கிறிஸ்து, மகிழ்வின் இரகசியத்தை கூறுகின்றார். தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் மகிழ்வீர்கள். மரணம் மட்டும் கீழ்படிந்ததாலே தான் இறைவன் அவரை உயிர்பித்து மாட்சிமைப் படுத்தினார்.

## எம்பேரில்

நித்திரை விட்டெழும்பிய மானொன்று நறுமணம் வீசுவதை உணர்ந்து. அம்மணத்தை கண்டுபிடிக்க வாழ் நாள் முழுவதையும் வீணாக்கியது. இறுதியில் சாகும் தறுவாயிலே அந்த நறுமணம் தன்னிடமிருந்தே வருகின்றது என்று கண்டுக்கொண்டது என ஒரு உருவக கதையொன்றுண்டு. அதே போல மனிதனும் தனக்குள் புதைந்துகிடக்கும் மகிழ்வை விளங்கிக்கொள்ள முடியாமல் ,எங்கோநாடி ஓடித்திரி கின்றனர். சாதாரண மனிதர்கள் முதல் பல பிரபல்யமான மனிதர்கள்,நடிகர்கள் அறிவுமே தைகளாக கருதப்பட்டவர்கள் கூட தற்கொலை செய்ய காரணம் தமக்குள் இருந்த மகிழ்வை கண்டுக்கொள்ள முடியாமையே. ஆனால் மகிழ்வாக வாழும் இரகசியத்தை இலகுவாக சொல்கின்றார் 'என் கட்டளைகளை கடைபிடியுங்கள்.' அவரது கட்டளை இரண்டே இரணடு 'உன் முழு இதயத்துடன் அன்பு செய்' 'உன்னைப்போல் உன் அயலானை நேசி.' இறைவனையும் மனிதனையும் அன்பு செய்யும் முறையை சொல்லவில்லை செய்து காட்டினார். எனது வீடு மிகச் சிறிய வீடு, எனது கணவருக்கு வருமானமில்லை, நான் சிறிய தொகை ஊதியம் பெறும் வேலைக்கு செல்கிறேன் ,எனக்கு ஒரேயொரு மகள் அவள் அரசாங்க பாடசாலையில் படிக்கிறாள் எனக்கும் என் கணவருக்கும் 50வயதை தாண்டிவிட்டது மகளோ 12வயது சிறுமி எதையிட்டும் நான் கவலைப் படுவதில்லை. எதிர்கால பயமோ எதிர் பார்ப்போ இல்லை காரணம் கணத்துக்கு கணம்வாழும் முறையை கிறிஸ்து எனக்கு சொல்லித் தந்துள்ளார். தாவீது அன்று சொன்னது போல கண்முன்னே இறைவனை வைத்துள்ளேன் என்றதுபோல, நானும் கிறிஸ்துவை எந்நேரம் நோக்குவதால் நான் மகிழ்வாக இருக்கின்றேன். நீங்களும்மகிழ்வாக வாழ ஆசையா? கிறிஸ்துவை நோக்குங்கள். மகிழ்வாய் வாழும் முறையை உங்களுக்கு சொல்லிதருவார்

## செபம்

படைப்பின் ஊற்றான தேவனே! எங்கள் அறியாமையாலே எமது அன்பை மறந்து, மகிழ்வை இழந்தோம். தேடிவந்து மீண்டும் மீண்டும் அன்பை பொழியும் உம் கருணைக்காக நன்றி என்றும் உம் அன்பில் வாழ உமதருளைத் தாரும்

ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 27 வெள்ளி**
**தி.து.ப.15:22-31** **பு.யோவான் 15:12-17**
**தி.பா.57:7-8,9-11**

## பரி.நற்செய்தியிலிருந்து

நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல் நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என்கட்டளை தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள். இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்லமாட்டேன் ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது உங்களை நான் நண்பர்கள் என்றேன் ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன் நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்...... நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டுமென்பதே என் கட்டளை.

## ஒளியில் விழிப்புறுதல்

தம்மை இவ்வுலகிற்கு அனுப்பியவர் மாசு மறுவற்ற அன்பார்ந்தவர் ஆவார் அவர் தம்மை அன்பு செய்வது போல தாமும் அதே அன்பினால் மற்றவர்களையும் அன்பு செய்வதே அவரது அபிலாஷையாகும். தாம் அன்பு செய்பவர்களும் மற்றவர்களை அதே அன்பினால் அன்பு செய்ய வேண்டும் எம் ஆண்டவர் இயேசுவின் அந்தரங்க அபிலாஷை இதுவாகும். அவர் இதனை நிறைவேற்றும் முகமாகவே செயற்படுகின்றார் இறைவனான அவர் தம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் முகமாக அனைத்திலிந்தும் வெறுமையாகியவாறு இவ்வுலகில் அவதரித்த அவர், அவரது மீட்புக்காக வேண்டி செயற்படுகின்றாரோ அவர்களையே தமது நண்பர்களாக கருதுகின்றார் தந்தை கூறுகின்ற அனைத்தையும் ஒளிவு மறைவின்றி அவர்களோடு பகிர்ந்து கொள்கின்றார். தந்தையின் திரு விருப்பத்தை நிறைவேற்றும் முகமாக தந்தை சொல்லும் அனைத்தையும் செய்கின்றார். ஆழமான தொடர்பினை தந்தையுடன் வைத்திருந்ததே அதற்கான காரணமாகியது.

ஆணைகள் என்ற பெயரில் அனாவசிமானவற்றை மக்கள் மீது சுமத்தாமல் மக்கள் செய்ய வேண்டியவற்றிற்கு அவர் முன்மாதியாகத் திகழுகின்றார் இயேசுவே உமக்குப் புகழ்.

## எம்பேரில்

ஆண்டவரது நண்பர்களாகத் தேர்ந்து கொள்ளப்பட்ட நாம் எமது செயற்பாடுகளைக் குறித்து மீளப் பார்ப்பதற்கான விழிப்புறுதலை ஆவியானவரிடம் வேண்டுவோம் எமது தவறான பேச்சு செயற்பாடு என்பவற்றால் மற்றவர்களைக் கலக்கமுறச் செய்கின்றோமா? எமது செயற்பாடுகள் அனைத்துமே கிறிஸ்துநாதருடைய உள்ளரங்க அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவையாக அமைந்துள்ளனவா?... இயெசுவின் அன்பினால் அனைவரையும் அன்பு செய்வதற்கான வல்லமையை வேண்டுவோம்.

## செபம்

தூய ஆவியானவரே! இயேசுவின் அன்பினால் மற்றவர்களை நண்பர்களாகக் கருதி அன்பு செய்வதற்கு எனது பெலயீனங்கள் எனக்குத் தடையாக அமைகின்றன என்பதைக் காண்பதோடு, தேவரீரது வல்லழமயால் நிரம்பும் பொது எத்தடையையும் வெற்றி கொள்ள முடியும் என்பதையும் விசுவாசிக்கிறேன் அந்த அன்பு கொண்ட இதயத்தை என்னுள் மலரச் செய்தருளும்......

ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 28 சனி

தி.து.ப.16:1-10 புு.யோவான் 15:18-21

தி.பா.100:1-3,5

## பரி.நற்செய்தியிலிருந்து

உலகு உங்களை வெறுக்கின்ற தென்றால் அது உங்களை வெறுக்கும் முன்னே என்னை வெறுத்தது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள் நீங்கள் உலகைச் சார்ந்தவர்களாய் இரந்திருந்தால் தனக்குச் சொந்தமானவர்கள் என்னும் முறையில் உலகு உங்களிடம் அன்பு செலுத்தி இருக்கும் .....பணியாளர் தலைவரை விடப் பெரியவர் அல்ல என்று நான் உங்களுக்குக் கூறியதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள் என்றால் உங்களையும் துன்புறுத்துவார்கள். என் வார்த்தையைக் கடைப்பிடித்திருந்தால் தானே உங்கள் வார்த்தையையும் கடைப்பிடிப்பார்கள். என் பெயரின் பொருட்டு உங்களை இப்படியெல்லாம் நடாத்துவார்கள் ஏனெனில் என்னை அனுப்பியவரை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை

## ஒளியில் விழிப்புறுதல்

**அன்பின் ஊற்றாகிய தூய ஆவியானவரே! அகிலமெங்கும் அசைவாடும் நீர் இந் நற்செய்தியைத் தியானித்து, அன்பர் இயேசுகிறிஸ்து நாதரின் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கி ன்றார். மூன்று வருட ஊழிய வாழ்க்கையில் தான் அனுபவித்த வேதனைகளையும், சோதனைகளையும் விளக்கி கூறுகின்றார். எனவே தான் அன்புச் சீடர்களைப் பார்த்து "உலகு உங்களை வெறுக்கிறது என்றால் அது உங்களை வெறுக்குமுன்னே என்னை வெறுத்தது" என்று கூறினார். உலகைச் சார்ந்தவர்களுக்கும், உலகில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் மக்களுக்கும் வித்தியாசம் இருப்பதனைக் காண்கின்றார். தம் சீடர்களுக்குப் பலவிதமான ஒழுங்கு முறைகளைக் கற்றுக் கொடுக்கும் ஆண்டவர் "தலைவர்களுக்குப் பணிந்திருங்கள்" என்று கீழ்ப்படிதலைக் கற்றுக் கொடுக்கிறார். அனுப்பியவரை அறியாத இவர்கள் எனக்கு செய்தது போன்று உங்களுக்கும் செய்வார்கள் இதை முன் கொண்டு விழிப்பாக இருக்கும்படி தெளிவுபடுத்துகின்றார்.**

## எம்பேரில்

*அன்று சீடரை அழைத்த ஆண்டவர் என்னையும் உங்களையும் பார்த்து, "நீ உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்துக்குச் சொந்தமில்லை, எனக்குத்தான் சொந்தம் " என்று கூறுகின்றார். சீடருக்கு கற்றுக்கொடுத்த ஆண்டவரின் குரலுக்குச் செவிகொடுத்து இறைபணி செய்து,எமது புகழ்சிக்கிராமத்தைக்கட்டி எழுப்புவோம்.*

## செபம்

எம் இதயங்களை அறிகின்ற ஆண்டவரே! தாழ்ந்த உள்ளத்தோடு உம் பணி செய்து இறை அரசைக் கட்டி எழுப்ப உதவி செய்தருளும்.

***ஆண்டவரே, கடவுள் என்று உணருங்கள்!அவரே நம்மை படைத்தவர்! நாம் அவர் மக்கள், அவர் மேய்க்கும் ஆடுகள்.'***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 வைகாசி 29 ஞாயிறு | 1 பேதுரு 3:15-18 |
| --- | --- |
| தி.து.ப.8:5-8,14-17 | பு.யோவான் 14:15-21 |
| தி.பா.66:1-7,16,20 | |

இன்று பாஸ்கா காலத்தின் ஆறாவது ஞாயிறு தினமாகும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு கிடைத்துள்ள அழைப்பானது 'என் பின்னே வா' என்பதாகும் இறை மகன் எப்பொழுதும் சென்றவிட மெல்லாம் தந்தையையே வெளிபாடாக்கினார். அவருள் அச்சம், பீதி, தயக்கம், இடம் என்பன இருக்கவில்லை தந்தைக்கு சாட்சி பகன்றார் அதே போல ஆவியானவரது வழிகாட்டு தலோடு அவருக்கு சாட்சி பகர்வதற்காகவே எப்போதும் அழைக்கிறார். எம்முள் தங்கியிருந்து உண்மையை நோக்கி எம்மை எடுத்து செல்லுகின்ற வழிகாட்டியாகிய தூய ஆவியானவர் பேரில் விழிப்புறுவோம். அநேகமாக காலமே (நேரம்) சாட்சி பகர்வதற்கு எமக்குத் தடையாக அமைந்துள்ளன. காலத்தின் உரிமையாளர் இறைவனே அவருக்காக வெண்டி காலத்தை அளிக்க முடியாது என்று கூறுயேவாமேயானால் அங்கே விசுவாசப் பிரச்சினை தான் இருக்கின்றது என்பதன் பேரில் விழிப்புறுவோம்.....

## முதலாவது வெளிபாட்டிலிருந்து

**பிலிப்பு சமாரியர் நகர் சென்று அங்குள்ள மக்களுக்கு மெசியாவைப்பற்றி அறிவித்தார் பிலிப்பு சொன்னவற்றைக் கேட்டும் அவர் செய்த அரும் அடையாள ங்களைக் கண்டும் வந்த திரளான மக்கள் ஒரு மனத்ணதோடு அவருக்கு செவிசாய்த்தனர். ஏனெனில் பலரைப் பிடித்திருந்த தீய ஆவிகள் அவர்களிடமிருந்து உரத்த குரலுடன் கூச்சவிட்டுக் கொண்டே சென்றன. முடக்கு வாதமுற்றொர், கால் ஊனமுற்றோர் பலரும் குணம் பெற்றனர். இதனால் அந்நகரில் பெரும் மகிழ்ச்சி உண்டாயிற்று....திருத்துாதர்கள்.... சென்று சமாரியர் தூய ஆவியால் ஆட்கொள்ளப் படுமாறு இறைவ னிடம் வேண்டினார்கள்... யோவா னும் பேதுருவும் தங்கள் கைகளை அவர்கள் மீது வைக்கவே அவர்கள் தூய ஆவியைப் பெற்றார்கள்.**

## ஒளியில் விழிப்புறுதல்

துணையாளரை அனுப்புவதாக இறை மகன் கொடுத்த வாக்குறுதி நிறைவேறியுள்ளது ஆவியானவரது அருளைப் பெற்றவர்களால் சங்கத்தினுள் அரும் பெரும் செயல்கள் நிகழ்கின்றன சீடத்துவ சங்கம் இறைவனுக்கு சாட்சி பகர்கின்றது தனிமை,அச்சம்.சந்தேகம் என்பன அவர்களது வாழ்விலிருந்து மறைந்து போயுள்ளன உயிர்த்த ஆண்டவரது வல்லமையைப் பெற்றவர்களாக பெரு மகிழ்வுடன் இறைமக்களாகப் பயனிக்கிறார்கள் அரும் பெரும் செயல்கள் நடைபெறுவதோடு அன்பின் சங்கங்கள் கட்டியெழுப்பப்படுகின்றன சீடர்கள் ஊர்ஊராகச் சென்று ஆவியரைக் கிடைக்குமாறு வேண்டி கைவைத்து செபிக்கின்றனர் ஒற்றுமைப் படுமிடத்தில் சங்கமமாகும் இடத்தில் உயிர்த்த ஆண்டவர் வீற்றிருக்கிறார். மனுவுருவாகி இருக்கிறார்.

## பரி.நற்செய்தியிலிருந்து

**நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளையை கடைப்பிடிப்பீர்கள் "உங்களொடு என்றும் இருக்கும் படி மற்றொரு துணை யாளரை உங்களுக்கு தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன் . அவரே உண்மையை வெளிபடுத்தும் தூய ஆவியார் உலகம் அவரைஏற்றுக் கொள்ள இயலாது ஏனெனில் அவர் உங்களோடு தங்கியிருக்கிறார் உங்களுக்குள்ளும் இருக்கிறார் நான் உங்களை திக்கற்றவர்களாக விட மாட்டேன் உங்களிடம் திரும்பி வருவேன்...... என் கட்டளைகளை ஏற்று கடைபிடிப்பவர் என் மீது அன்பு கொண்டுள்ளார் என்மீது அன்பு கொள்பவர் மீது தந்தையும் அன்பு கொள்வார் நானும் அவர் மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிபடுத்துவேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளியில் விழிப்புறுதல்

இறை மகன் இயேசு அன்பார்ந்தவரான படியால் உலக மீட்பிற்காக வேண்டி தம் உயிரையே பலியாகத் தந்தார் அதன் வழியாக தந்தையின் சதாகால அன்பு வெளிபாடாகியது. வெளிபாடாகிக் கொண்டிருக்கிறது "என் பின்னே வா" என்று அழைக்கின்ற அழைப்பால் எம்மை அன்பின் அரவணைப்பிற்காக அழைக்கிறது. தந்தையின் குரலொளிக்கு செவிமடுக்கின்ற மகனானவர் செல்வம் சுகபோகம் போன்றன எமக்கு கிடைக்க வேண்டுமென்று தந்தையிடம் வேண்டவில்லை மாறாக எம்மோடு என்றும் இருக்கும் படியாக, வழிகாட்டியாகிய, துணையாளராகிய ஆவியானவரை அனுப்பும்படியே வேண்டுகின்றார் ஏனெனில் அவர் வரும் பொது நாம் வல்லமை பெறுவோம். உண்மையை நோக்கிட இறைமகனிடம் எம்மை எடுத்துச் செல்வார்.

## எம் பேரில்

"....உலகம் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது ஏனெனில் அது அவரைக் காண்பதுமில்லை, அறிவதுமில்லை நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள்" நான் அறிந்திருக்கின்ற ஆவியானவர் எனக்கு யார்? உண்மையாகவே நான் அவரை அறிவேனா? நான் அவரை அனுபவித்தவாறு எத்தனை பேருக்கு அவரை இனம்" காண்பித்துள்ளேன்?

நான் அவரை அறிவேன் அனுபவிக்கிறேன் அவரை எனக்குள் எனது குடும்பத்திற்குள் மாத்திரம் வைத்திருக்கின்றேனா? அகிலத்தின் அன்பினால் அன்பு செய்கின்ற இறைமகனின் புத்திரத்தன்மையை நான் உரிமையாக்கிக் கொள்கிறேன் சாட்சி பகர்வதற்கான வல்லமையை என்னுள் தங்கியிருக்கும் துணையாளரிடம் வேண்டுகின்றேன்.

## இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

**உங்கள் உள்ளத்தில் கிறிஸ்துவை ஆண்டவராகக் கொண்டு அவரைத் தூயவரெனப் போற்றுங்கள் நீங்கள்எப்பொழுதும் ஆயத்தமாய் இருங்கள் ஆனால் பணிவோடும் மரியாதையோடும் விடையளியுங்கள் உங்கள் மனச்சான்றும் குற்றமற்றதாயிருக்கட்டும் அப்பொழுது உங்கள் கிறிஸ்தவ நன்னடத்தையைப் பழிக்கிறவர்கள் உங்களை இழிவாகப் பேசியதைக் குறித்து வெட்கப்படுவார்கள் ஏனெனில் தீமை செய்து துன்புறுவதை விட கடவுளுக்குத் திருவுளமானால் நன்மை செய்து துன்புறுவதேமேல்.... கிறிஸ்துவும் இறந்தாரெ னினும் ஆவிக்குரிய இயல்புடைய வராய் உயிர் பெற்றெழுந்தார்**

## ஒளியில் விழிப்புறுதல்

பேதுருவானவர் தமது அநுபவத்தையே பகிர்ந்து கொள்கிறார் போலும் எம்மில் பலர் உயிர்த்த ஆண்டவரை எமது ஒரே ஆண்டவராகவும் மீட்பராகவும் ஏற்றுக்கொண்டு எமது வாழ்வை அவர் கையில் பாரம் கொடுத்துள்ளோம் ஆயினும் பல பிரச்சினைகள் துன்ப துரிதங்கள் முன்னிலையில் நான் எங்கே இருக்கிறேன்? எனது வாழ்வின் வழி மற்றவர்கள் உயிர்த்த ஆண்டவரைக் காணுகின்றார்களா? சவால் மிக்கதாக அமைந்துள்ளது.

இயெசு ஆண்டவர் வாழ்வின் குறிக்கோளாக இறையரசே அமைந்திருந்தது எப்போதும் அதற்குச் சாட்சி பகர்கின்றார் இன்று நான்???

## செபம்

இயேசு ஆண்டவரே! எனது வாழ்வு எத்துணை சவால் மிக்கதாக அமைந்துள்ளது? என்னை ஆட்டிப்படைக்கின்றது நான் இருக்குமிடத்தை காண்பதற்காக வேண்டி என்னுள் வீற்றிருக்கும் ஆவியானவர் வழியாக என்னை ஒளிமயப்படுத்தியருளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 வைகாசி 30 திங்கள்**

**தி.து.ப.16:11-15 தி.பா.149:1-6,9 பு.யோவான் 15:26-16:4**

## முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

.... பவுல் பேசியதை ஏற்றுக் கொள்ளுமாறு ஆண்டவர் அவர் உள்ளத்தை திறந்தார்....

## பரி.நற்செய்தியிலிருந்து

**தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகின்ற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிபடுத்தும் தூய ஆவியார் அவர் வரும் போது என்னைப் பற்றிச் சான்று பகர்வார் நீங்களும் சான்று பகர்வீர்கள்.... நீங்கள் நம்பிக்கை இழந்து விடாதிருக்க இவற்றையெல்லாம் நான் உங்களிடம் சொன்னேன் உங்களை தொழுகைக் கூடத்தி லிருந்து விலக்கி வைப்பர்கள் உங்களைக் கொல்லுவோர் கடவுளுக்கு திருப்பணிசெய்வதாக எண்ணும் காலமும் வருகின்றது தந்தையையும் என்னையும் அறியாமல் இருப்பதால் தான் இவ்வாறு செய்வார்கள் இவை நிகழும் நேரம் வரும் போது நான் இவை பற்றி முன்பே உங்களுக்கு சொன்னதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். இதற்காகவே இவற்றை உங்களிடம் கூறினேன்.**

**(மிகுதியை தியான நிலையில் வாசிக்கவும்)**

## ஒளியில் விழிப்புறுதல்

ஆவியானவரே என்னை வழிநடத்தும் ஆவியானவரின் வல்லமையால் நிரம்பியிருந்த இயேசு நாதர், நிகழவிருக்கின்ற ஒவ்வொரு நிகழ்சிகளையும் செபத்தின் ஒளியில் கண்டு அதனை சீடர்களுக்கு வெளிப்படுத்துவதனை இன்றைய நற்ச்செய்தி வெளிப்படுத்துகின்றது இவை அனைத்தும் ஆண்டவரின் உயிர்ப்பின் பின்னர் ஒன்றுகூட பிசகாமல் நிறைவேறியதை நாங்கள் காண்கின்றோம். தூதர்கள் ஆவியா னவரால் ஆட்கொள் ளப்பட்டதன் பின்னர் ஆண்டவரைப் பற்றிய நற்செய்தியின் பொருட்டு தம்வாழ்க்கையைப் பொருட்படுத்தாமல், முன்னெறிச் செல்வதை நாங்கள் திருதுதர்பணிப் புத்தகத்தில் காணலாம். உண்மையை வெளிப்படுத்தும் ஆவியானவர் செல்ல வேண்டிய இடத்தை காண்பித்ததும், சொல்ல வேண்டியவற்றை அவர்கள் வழிய ாகத் தாமே வெளிப்படுத்தியும் செய்ய வேண்டியவற்றைக் காண்பித்தும் வழிநடத்துகின்றார். நாமும் திருதூதர் பணியை நிறைவேற்ற திருமுழுக்கின வழியாக அழைக்கப் பட்டிருக்கின் றோம்.

## விழிப்புறுவோம்

செபத்தின் வழியாக ஆண்டவரின் அரசினைப் பரப்ப நாம் தாகம் கொண்டோமேயானால், ஆவியானவர் தாமே நாம் செல்ல வேண்டிய இடத்தையும், சந்திக்க வேண்டிய நபரையும் காண்பித்து தருவார். வாரும் ஆவியானவரே! எம்மைக் கொல்வோர் முன்வந்தாலும் பின்வாங்காமல் இறையரசின் சாட்சியாளர்களாக எம்மை அழைத்துச் செல்லும். உயிர்த்தெழுந்த ஆண்டவராம் இயேசு கிறிஸ்து நாதரே! உமது உயிர்ப்பின் மகிமையை ஆற்றும் வல்லமைமிகு செயல்லாற்றுதலை எம்முள் காணவும் அதற்கு சான்று பகரவும் எம்முள்ளத்தை ஒளிமயமாக்கியருளும்.

## செபம்

உயிர்த்தெழுதல் வழியாக கிறிஸ்தவத்திற்க்கு புத்துயிர் அளித்த ஆண்டவரே! உமது உயிர்ப்பின் மகத்துவத்தைக் கண்டறிந்த ஒவ்வொரு கிறிஸ்தவரும், மகத்துவம் மிகுந்த வாழ்க்கை நிலைக்கு உயர்த்த பெற வரம் அருளும். மக்கள் ஒவ்வொருவரும் உடல், உலகம் சாத்தானின் ஆசாபாசங்களை விரட்டி திருமுழுக்கின் வரப்பிரசாதத்தை உரிமையாக்கிக் கொண்டு வாழ அருள் புரியும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 வைகாசி 31 செவ்வாய்

எசா.12:2-6 பு.லூக்.1:39-56

செப் 3:14-18

அல்லது

உரோ.12:9-16

## பரி.நற்செய்தியிலிருந்து

அதன் பின் மரியா புறப்பட்டு யூதேய மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் விட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத் கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று எலிசபெத் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப் பட்டார் அப்போது அவர் உரத்த குரலில் பெண்களுக்குள் நீர் ஆசிபெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்து ரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றி னுள்ளேகுழந்தை பேருவகையால் துள்ளிற்று ஆண்டவர் உமக்கு சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர் என்றார்.

## ஒளியில் விழிப்புறுதல்

இன்றைய தினம் திருச்சபையானவள் பேறு பெற்றதாயார் மரிய அன்னை எலிசபெத்தமாளை சந்தித்த நிகழ்ச்சியை திருவிழாவாகக் கொண்டாடுகின்றாள். தூய ஆவிரனவரே இந்நேரம் இக்கணம் எமது பெலவீனமான இதயத்தை மூடிக் கொள்ளும் செப்பனியா இறைவாக்கினரதும் எசாயா இறைவாக்கினரதும் இறைவாக்குகளை கேட்டோ,வாசித்தோஅறிந்த இறை மகன் பேறுபெற்றத் தாயாரை ஆண்டவர் உலகம் தோன்றும் முன் இருந்தேமுழு மனித சமுதாயத்தின் மீட்ப்புக்காக தேர்ந்தெடுத்துள்ளார் என்பதற்க்கு விழிப்புறுகின்றார். பேறு பெற்ற தாயின் உதரத்தில் தம்மை மனுவுருவாக்குவதற்க்குத் திருவுளம் கொண்ட அப்பா தந்தையின் மறை இரகசிய செயற்பாடுகளைக் கண்டி ருப்பார்கபிரியேல் வானதூதர் அருள் மிகப் பெற்றவரே வாழ்க,ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார். தூயஆவி உம்மீது வரும் அப்பொழுது ஒரு குழந்தையை பெற்றெடுப்பீர் என்ற இறை வார்த்தையை ஏற்றுக்கொள்ளும் அவரின் வயிற்றில் இயேசு மனுவுருவானார். அந்த நற்செய்தியை தம்முடன் வைத்திராது அந் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளவும் எலிசபெத் தம்மாளுக்கு பணிபுரிவதற்க்கும் செக்கரியா இறை வாக்கினர் வீட்டுக்குச் சென்ற பேறு பெற்றதாயார் எலிசபெத்தாம்மாளுடன் சங்கமமாகின்றார். என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? வாழ்த்துறையைக் கேட்டதும் இருவரின் உதரங்களில் தரித்திருந்த குழந்தைகளும் பேருவகையால் துள்ளிற்று. இருவரும் தாழ்ந்த உள்ளத்துடன் ஆண்டவரைப் போற்றுவதுடன். பேறு பெற்ற தாயார் ஆண்டவரை நோக்கிப் புகழுபாடுகின்றா

## எம்பேரில

இறை அரசிற்கான மக்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் பேறு பெற்ற தாயாரின் அனுபவத்திற்க்கு விழிப்புறுவோம். இறை மகனை இதயத்தில் மனுவுருவாக்கும் தாகம் எம்முள் இருக்கின்றதா? வேதனைப்படும், கஷ்டபடும் மக்களைத் தேடிச்சென்று சங்கமமாகும் தாகம் எம்முள் இருக்கின்றதா? பேறு பெற்ற தாயாரைப் போல் இயேசுவின் நற்செய்தியினை மக்களிடையே எடுத்துச்சொல்லும் தாகம் எமக்கு இருக்கின்றதா? எமது பெலவினங்கள் பேரில் விழிப்புற்று பேறு பெற்ற தாயின் இலட்சணங்களில் ஒன்றையாவது உரிமையாக்கிக் கொண்டு இறை அன்பினை அனுபவித்திட எம்மை வழி நடத்த தூய ஆவியயனவருக்கு இடமளிப்போம்.

## செபம்

அன்பின் ஆண்டவரே! பேறு பெற்ற தாயாரின் இலட்சணங்களை எமது வாழ்வில் உரிமையாக்கிக் கொண்டு சங்கம வாழ்க்கை வாழ நற்செய்தியினை மற்றவருடன் பகிர்ந்து கொள்ள உமது பரிசுத்த ஆவியினால் மூடிய வண்ணம் வழிநடத்தும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "தூய ஆவியில் பயணம" சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

பெயர் : ..............................................................................................................

சஞ்சிகையை அனுப்ப வேண்டிய விலாசம் : ..................................................................

..............................................................................................................................

.................ஆம் ஆண்டு........................ மாதம் தொடக்கம் ஆறு/பன்னிரெண்டு மாதங்களுக்காக ரூபா...............................ஐ........... இலக்கமுடைய காசுக்கட்டளையை /காசோலையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

திகதி :..................................                                    ..........................................
கையொப்பம்

---

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகை

- ❖ தபால் கட்டணத்துடன் : ஆறு மாதங்கள் - ரூ. 110.00
  பன்னிரெண்டு மாதங்கள் - ரூ. 220.00
- ❖ காசுக்கட்டளைகள்/காசோலைகள் : "கிது தன புபுதுவ" என்ற பெயருக்கு மாத்திரம் அனுப்பவும்.
- ❖ பணம் செலுத்தும் அலுவலகம் : வல்பொல (மே. மா.)
- ❖ புபுதுவ நடுநிலையம் : ஸ்ரீ பிரசங்சாராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300 ப/க்ஸ் : 011-2231490
  மின்தபால் (E-mail) : pubuduwa@wow.lk
  Website : www.kithudanapubuduwa.net
  அச்சகம் : புபுது அச்சகம்,
  452, தேசிய பெசிலிக்கா மாவத்தை, தேவத்தை, ராகம.
  தொலைபேசி : 011-2958439
- ❖ பகிர்ந்தளித்தல் : "புபுதுவ" வெளியீடு - பரப்புதல் சேவை
  ஸ்ரீ பிரசங்சாராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300
- ❖ சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் :
  - ஸ்ரீ ரம்யா ராமய, பாலக்குடா, தலவில கோயில்.
  - ஸ்ரீ கிறிஸ்து தர்மாராமய, தெதுரு ஓயா, மானுவன்கம, சிலாபம்.
  - புபுது நிவச, தம்பறாவில, வைக்கால்.
  - புபுது நிவச, தங்கொட்டுவ.
  - புபுது நிவச, 386, பிரதான வீதி, நீர்கொழும்பு.
  - கிறிஸ்து கேந்திரய, ஜா-எல.
  - 7வது மாடி, 6வது சின்னப்பர் நடுநிலையம், கொழும்பு-11.

விலை ரூ. 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்பட கதை

உரோமையில் புனித பேதுரு பெசிலிக்காவில் வலது பக்கம் ஸ்தாபித்திருக்கும் சிலுவைமரத்தடியில் அம்மாவின் மிகவும் அலங்காரமான வெண்மையான கல்லால் உருவாக்கப்பட்ட சிலை (PIETA BASILICA DI D. TIERO) மைக்கல் அஞ்சலோ கலைஞரின் நிர்மானம்.

ஒரு நபர் தாயுடன் கொண்ட மனவருத்தத்தினால் தன்னிடமிருந்த துப்பாக்கியினால் சிலையின் மூக்கை காயப்படுத்தினார் என்பது தெரிந்த விடயமாகும். இந்த சிலையை ரவை துளைக்க முடியாத கண்ணாடியால் மூடியிருக்கின்றது அதற்கு பக்கத்தில் சென்று பார்க்கும் முகமாக இன்னுமொரு சிலை வைக்கப்பட்டுள்ளது.
பல்லாயிர கணக்கான மக்கள் சென்று அதைக் கண்சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பது அதன் அலங்காரத்தினால் மட்டுமல்ல.

பேறுபெற்ற தாய்க்கு கொடுக்க கூடிய உயர்ந்த கௌரவம் அத்தாயை போல வெறுமையாகுதல், கைவிடுதல், இறைசித்தத்திற்கு முழுமையாக அடிபணிதல் பரிசுத்த ஆவியானவர் நிரம்பியிருக்க கொண்டிருந்த தாகம் காரணம் இல்லையா?

2011 வைகாசி மாத தூய ஆவியின் பயணம்

ISSN 1391 - 5975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org